வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු

மாருதி Money Exchange (Pvt) Ltd.

MARUTHI MONEY EXCHANGE

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06

T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றும்

Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றும்

WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk

மலர் : 04 22.04.2023 சனிக்கிழமை இதழ் : 134 பக்கங்கள் : 16






### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# நாடு முழுவதும் நேற்று நினைவேந்தப்பட்டது!

கொழும்பு, ஏப். 22

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் 4ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று நாடு முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டது.

தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் - பாதிக்கப் பட்ட வர்களுக்காக நீதி கோரி கடுவாப்பிட்டி முதல் கொச்சிக்கடை அந் தோனியார் தேவாலயம் வரை பேரணி ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.

**13 மணி நேர நடை பவனி**

நீர்கொழும்பு - கடு வாப்பிட்டி தேவாலயத் தில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு ஆரம்ப மான இந்த நடைபவனி யானது. நேற்று வெள்ளிக் கிழமை காலை 8. 20 மணிக்கு கொழும்பு கொச்சிக் கடை அந்தோனியார் திருத்தலம் முன்

15




## தென்பட்டது பிறை; ஈகை திருநாள் இன்று

கொழும்பு, ஏப். 22

நாட்டின் சில பகுதிக ளில் ஷவ்வால் மாத தலைப் பிறை தென்பட்டமை யால் ஈகை திருநாளை (ரமழான்) இன்று கொண் டாடுமாறு கொழும்பு பெரிய பள்ளிவாசல் நேற்று அறிவித்தது.

தலைப்பிறையை தீர் மானிக்கும் மாநாடு கொழும்பு பெரிய பள்ளி வாசலில் மஹ்ரிப் தொழு

15

## பள்ளிவாசல்களுக்கான பாதுகாப்பு அதிகரிப்பு!

கொழும்பு, ஏப். 22

இஸ்லாமிய மக்களின் ஈகைத் திருநாள் (ரமழான் பண்டிகை) இன்றாகும். இதையொட்டி நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஈகைத் திருநாளை ஒட்டி கண்டி அக்குரணை யில் பள்ளிவாசலில் குண்டு தாக்குதல் நடத் தப்பட லாம் என்று பொலிஸாருக்கு தகவல்

15

## தமிழ் மொழி மூல விடைத்தாள் திருத்தும் பணி நேற்று ஆரம்பம்!

கொழும்பு, ஏப். 22

தமிழ் மொழி மூல மான உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட் டின் முதல் கட்ட பணி கள் நேற்று வெள்ளிக் கிழமை ஆரம்பமானதாக கல்வி அமைச்சு தெரிவித் துள்ளது.

இந்து சமயம், கிறிஸ்த வம், இந்து நாகரிகம், பரத நாட்டியம், கீழைத் தேய சங்கீதம், கர்நாடக சங்கீதம், மேற்கத்திய சங்கீதம், சித்திரம், நாடக மும் அரங்கியலும் மற் றும் ஹிந்தி ஆகிய பாடங் களுக்கான பணிகளே தற் போது ஆரம்பிக்கப்பட் டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர்

15

### பயங்கரவாத எதிர்ப்பு சட்டம்:

## உயர் நீதிமன்றின் கட்டளையை அப்படியே செயல்படுத்துவோம்

### நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, ஏப். 22

தடுப்புக்காவல் உத்த ரவு பிறப்பிக்கும் அதிகா ரத்தை பொலிஸ்மா அதி பர், பிரதி பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு வழங்க வேண்டாம் என் றால் அந்த அதிகாரத்தை பாதுகாப்பு அமைச்ச ருக்கு வழங்க தயார். உத் தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றம்

15

## தேசிய அரசாங்கத்தில் இணைய மாட்டோம்!

### சிறீ லங்கா சுதந்திர கட்சி

கொழும்பு, ஏப். 22

சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டால் அதில் நாம் பங்கேற்போம். அதனை விடுத்து தேசிய அரசாங்கம் என்ற பெய ரில் அமைச்சரவை அமைச் சுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் இரா ஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்களை நியமிப்ப தற்கும் துணை போக முடியாது என்று சிறீ லங்கா

15

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# புதிய, வெளிப்படையான விசாரணையே வேண்டும்!

## தற்போதைய ஜனாதிபதி, அரசை நம்பமுடியாது என்கிறார் பேராயர்!

கொழும்பு, ஏப்ரல் 22

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் புதிய மற்றும் வெளிப் படையான விசாரணை நடத்தப்பட வேண்டும். தற்போதைய ஜனா திபதி மற்றும் அரசாங்கத்திடம் இருந்து நீதியை எதிர்பார்க்க முடி யாது என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.**

15






உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் கொல்லப்பட்ட தனது உறவுக்காக நீதிகோரிய பயணத்தில் பங்கேற்ற சிறுமி...!

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தில் பொருத்தமற்ற சரத்தை நீக்குக!

### மகா நாயக்கர்கள் ஜனாதிபதிக்கு வலியுறுத்து

கொழும்பு, ஏப். 22

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் பரந்த சமூக உரையாடலை உரு வாக்கி, நிபுணர் குழுவின் ஊடாக பொருத்தமற்ற சரத்துகளை நீக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவிடம் பௌத்த மகா நாயக்கர்கள் கோரியுள்ள னர்.

ஜனாதிபதிக்கு கூட் டாக அறிக்கை ஒன்றை அவர்கள் அனுப்பி வைத் துள்ளனர்.

அதில், பயங்கரவாத சட்டமூலம் நிறைவேற் றப்பட்டமை தேசிய மற் றும் சர்வதேச ரீதியில் எமது நாட்டின் ஜனநாய கம் தொடர்பில் பலத்த சந்தேகங்களை எழுப்பக் கூடும் என சுட்டிக்காட்டி யுள்ளனர். (ஐ)

## இப்படியும் நடக்கிறது…!

கொழும்பு அரசியலில் இப்போது நான்கு இடங்கள் மிகப் பரபரப்பாக இருக்கின்றனவாம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விருப்பப்படி சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் முன்வைத்து, அதற்கு பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெறுவதான யோசனையை அமைச்சரவை கடந்த வாரம் அங்கீகரித்திருந்தது.

எதிர்வரும் இருபத்தி ஐந்தாம் திகதி அது பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு அதற்கான அனுமதியை கோரும் தீர்மானம் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனை எதிர்த்து வாக்களிக்க மிகச் சிலரே முன்வருவார்கள் என்பது ஜனாதிபதி அறியாததல்ல. இன்றைய நிலையில் அது மிகப் பெரும் ஆதரவுடன் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

அந்த அனுமதி கிடைத்த பின்னரே அதனைக் கொண்டு செல்ல தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் யோசனையை ஜனாதிபதி ரணில் விடுப்பார் என்று அவரே கூறியிருக்கிறார். தாம் ஜனாதிபதியைச் சந்தித்தபோது இந்த யோசனையை தம்மிடம் கூறினாரென மனோ கணேசன் பகிரங்கமாகவே தெரிவித்திருந்தார்.

அவ்வாறு ஜனாதிபதி ரணில் பகிரங்க அழைப்பு விடுத்ததும் அவரின் அரசாங்கத்தில் இணைந்து கொள்ளத் தயாராகும் எதிர்க் கட்சி எம். பிக்களை ஒருங்கிணைக்கும் பணி கொழும்பில் நான்கு இடங்களில் தற்போது நடந்து வருகின்றதாம். முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார அகியோரின் இல்லங்களில் தொடர்ந்து நடந்து வரும் பேச்சுகளையடுத்து, கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன வீட்டில் கடைசிக் கட்ட பேச்சுகள் நடந்து வருகின்றனவாம். இதனால் கடந்த சில நாட்களாகவே இந்த நால்வரின் இல்லங்களும் பரபரப்பாக இருந்து கொண்டிருக்கின்றன.

இன்றைய நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் இரட்டை இலக்கங்களில் கட்சி மாறுவதற்கு தயாராகி வருகின்றனரெனவும் அந்த எம். பிக்கள் மாத்திரமன்றி, கட்சியின் முக்கிய தலைவர்கள் சிலரும் (எம். பிக்கள் அல்லாதவர்கள்) இவர்களுடன் இணைந்து கொள்ளவிருக்கின்றனர் என்கின்றன கொழும்புத் தகவல்கள்.

இது, ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து வருபவர்கள் தொடர்பான தகவல்கள் என்றால், இன்னுமொரு புறம் ஐக்கிய மக்கள் சக்தியின் மற்றுமோர் எம்.பியான பாட்டாளி சம்பிக்க ரணவக்க தலைமையில் மற்றுமொரு நகர்வு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் மே இருபத்தி இரண்டாம் திகதி, அவர் புதிய அரசியல் கூட்டணி ஒன்றை ஆரம்பிக்கவிருக்கிறார். ஐக்கிய குடியரசு முன்னணி என்ற பெயரில் அவர் ஆரம்பிக்கவிருக்கும் புதிய அரசியல் கட்சியில், பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்து சுயேச்சையாக இயங்கிவரும் பலரும் இணையவிருக்கின்றனர். அவர்கள் மாத்திரமன்றி, சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து அரசுடன் இங்கிவரும் நிமால் சிறிபால டி சில்வா, மகிந்த அமரவீர போன்றவர்களும் இந்த முன்னணியில் சங்கமமாக இருக்கின்றனர் என்கின்றன சம்பிக்கவுக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

ஜனதிபதி வேட்பாளராவதற்காக நாற்பத்தி மூன்றாம் படையணி என்ற பெயரில் ஓர் இயக்கத்தை ஆரம்பித்து செயல்பட்டு வந்த சம்பிக்க அடுத்த தேர்தலில் போட்டியிடுவதை தவிர்த்து விட்டாரெனவும் ஆனால், பின்னர் நடக்கும் பாராளுமன்றத் தேர்தலை இலக்குவைத்து இந்த முன்னணியை இப்போது தொடங்குகிறார் என்றும் அந்த முன்னணியும் பெரும்பாலும் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான பரந்த கூட்டணி ஒன்றுடனேயே தேர்தலை சந்திக்கும் என்றும் நம்பப்படுகின்றது.

என்ன இருந்தாலும் அடுத்த வாரம் இலங்கை அரசியலில் பல அதிரடித் திருப்பங்களும் பரபரப்புக்களும் நிறைந்த வாரமாகவே இருக்கும் என்பது தெரிகின்றது.

**- ஊர்க்குருவி**

# எக்ஸ்பிரஸ் பேர்ள் விவகாரம் இலஞ்சம் வாங்கியவர் யார்?

### பகிரங்கப்படுத்துமாறு நீதியமைச்சரிடம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 22

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தில் கடல் வளங்கள் பாதுகாப்பு அதிகார சபைக்கும் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்பட்டன. நட்டஈடு பெற்றுக்கொள்ளும் விவகாரத்தில் இலஞ்சம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு ஊடாக விசாரணைகளை மேற்கொண்டு நாட்டு மக்களுக்கு உண்மையை பகிரங்கப்படுத்துமாறு நீதியமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக என கடல் வளங்கள் பாதுகாப்பு அதிகார சபையின் முன்னாள் தலைவர் தர்ஷினி லஹந்தபுர தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீர்கொழும்பை அண்மித்த கடற்பரப்பில் இரு தடவைகள் நங்கூரமிடப்பட்டுள்ள வெளிநாட்டுச் சரக்கு கப்பலில் இருந்து மஞ்சள் நிறத்தில் புகை வெளியேறுவதாக 2021.05.20 ஆம் திகதி மாலை 04 மணியளவில் கடல்வள பாதுகாப்பு அதிகார சபைக்கு தகவல் கிடைக்கப் பெற்றது. 2021.05.21 ஆம் திகதி காலை உரிய அதிகாரிகளுடன் கப்பலுக்கு அருகில் சென்றோம்.

நாட்டின் கடல் வளத்துக்கு பாதிப்பை ஏற்படுத்த வேண்டாம்,விரைவாக கடல் எல்லையை விட்டுச் செல்லுங்கள் என 2021.05.21 ஆம் திகதி பகல் கப்பலின் கப்டன்,கப்பல் நிறுவனம் உட்பட நான்கு பிரதான தரப்பினருக்கு உத்தியோகபூர்வ அறிவித்தோம். தீயணைப்புப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கப்பல் நிறுவனம் கோரிக்கை விடுத்ததை தொடர்ந்து முழுமையான ஒத்துழைப்பு வழங்கினோம்.

தீ பரவல் 2021.05.24 ஆம் திகதி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. 2021.05.25 ஆம் திகதி கப்பலில் மீண்டும் தீ பரவ ஆரம்பித்து பெரும் வெடிப்புக்கள் ஏற்பட்டன. கடல் எல்லையை விட்டுச் செல்லுமாறு பலமுறை வழங்கிய அறிவுறுத்தலை கப்பலின் உரிய தரப்பினர் கவனத்தில் கொள்ளவில்லை.

கப்பல் முழுமையாக தீக்கிரையாகி ஜூன் மாதமளவில் கடலில் முழுமையாக மூழ்கியது.

இந்த கப்பலில் 380 மெற்றிக் தொன் எண்ணெய் கடல் நீரில் கலக்காமல் இருப்பதற்கு ஆரம்பக்கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. கப்பலில் சேமிக்கப்பட்டிருந்த பிளாஸ்ரிக் பரல்கள் நாடு முழுவதிலும் உள்ள பெரும்பாலான கடற்கரைகளில் கரையொதுங்கின.

நெருக்கடிகளுக்கு மத்தியில் கடல் வளங்கள் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை எடுத்தோம்.

கப்பலில் ஏற்பட்ட தீ விபத்து தொடர்பில் உரிய தரப்பினருக்கு முறைப்பாடு செய்தோம்,சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சட்டமாதிபர் திணைக்களத்திடம் உரிய ஆவணங்களை சமர்ப்பித்தோம். விபத்தினால் கடல் வளங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை மதிப்பீடு செய்வதற்கு 40 துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய குழுவை நியமித்தோம்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தில் கடல் வளங்கள் பாதுகாப்பு அதிகார சபைக்கும், சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்பட்டன. இருப்பினும், எனது எதிர்ப்பு வெற்றி பெறவில்லை.

நட்டஈடு பெற்றுக்கொள்ளும் விவகாரத்தில் இலஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாக தற்போது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு ஊடாக விசாரணைகளை முன்னெடுத்து நாட்டு மக்களுக்கு உண்மையை பகிரங்கப்படுத்துமாறு நீதியமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளேன்-என்றார். (அ)

# பேராதனைப் பல்கலை. மாணவனின் ‘பசி உறுநிலம்’ கவிதை நூல் வெளியீடு

கொழும்பு, ஏப். 22

ஜீவநதியின் 263ஆவது வெளியீடாக, பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை மாணவன் வில்வரசனின் “பசி உறுநிலம்“ கவிதை நூல் வெளியீடானது நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் பேராதனைப் பல்கலைக் கழக கலைப்பீட கருத்தரங்க மண்டபத்தில் இடம்பெற்றது.




பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை மாணவர் மன்ற ஏற்பாட்டில் பேராசிரியரும் துறைத்தலைவருமான சிறி.பிரசாந்தன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் பேராசிரியர் சிறி. பிரசாந்தன் நூலை வெளியீட்டு வைக்க, முதற் பிரதியை துணுக்காய் கல்வி வலய தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் சு. லோகேஸ்வரன் பெற்றுக்கொண்டார். நூலுக்கான அறிமுக உரையை தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ. சுதர்சன் வழங்கினார்.

தொடர்ந்து நூல் விமர்சன உரை செல்வி தனுஷா இராஜேந்திரத்தால் வழங்கப்பட்டது.

இறுதியாக ஏற்புரையை கவிஞர் வில்வரசன் வழங்கினார். நிகழ்வில் கலைப்பீட விரிவுரையாளர்கள் மற்றும் பல்வேறுபட்ட பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொண்டனர். (அ)

# ‘ப்ளூ ரிக்’ அங்கீகாரத்தை இழந்த பிரபலங்கள்!

கொழும்பு, ஏப். 22

‘ப்ளூா ரிக்’ அங்கீகாரத்துக்கு சந்தா கட்டணம் செலுத்தாத ருவிற்றர் கணக்குகளுக்கு கடந்த வாரம் கெடு திகதி நிர்ணயித்திருந்தார் அதன் பிரதம நிறைவேற்று பணிப்பாளர் எலான் மஸ்க்.

அதனடிப்படையில் இலங்கை பிரபலங்கள் பலரும் ‘ப்ளூா ரிக்’ இழந்துள்ளனர்.

அந்த வகையில், முன்னாள் ஜனாதிபத மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, ஹர்ஷ டி சில்வா, உள்ளிட்டவர்களும் ‘ப்ளூா ரிக்’ இழந்துள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
22.04.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 09

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசியல்வாதிகள் சொந்த புத்தியில் இயங்க வேண்டும்?

தமிழ் கட்சிகள் எதிர்வரும் 25ஆம் திகதி கடையடைப்புக்கான அழைப்பை வெளியிட்டிருக்கின்றனர். இவ்வாறான கடையடைப்புகள் பலவற்றை மக்கள் கண்டிருக்கின்றனர். ஒருநாள் கடையடைப்பு மறுநாளுடன் மறந்து போவதே இதுவரையில் நடந்திருக்கும் சங்கதி. எனினும், ஆட்சியாளர்களின் அத்துமீறலை எதிர்க்கும் நோக்கில் - இவ்வாறான எதிர்ப்புகளை வெளியிடுவதைத் தவிர, வேறு எதனையும் செய்யக்கூடிய நிலையில் அரசியல் கட்சிகள் இல்லை. ஆனால், ஆட்சியாளர்களின் பௌத்த மயமாக்கலை எதிர்க்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் இவ்வாறான ஜனநாயக எதிர்ப்பு நடவடிக்கைகள் கட்டுக்கோப்பானவையாகவும் தெளிவான நிலைப்பாடுகளை முன்வைப்பனவாகவும் இருக்க வேண்டும். அவ்வாறில்லாது ‘சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானம் ஆண்டி’ என்பது போல் அமையக்கூடாது.

தமிழ் கட்சிகளின் இந்த அடையாள எதிர்ப்பு நடவடிக்கையின்போது, 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராகவும் கோஷம் எழுப்புமாறு சிவில் சமூகமாக தங்களை அடையாளப்படுத்துவோர் அறிக்கைகளை வெளியிடுகின்றனர். இந்த விடயத்தில் தமிழ் அரசியல் கட்சிகள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். ஈழத் தமிழ் மக்களுக்கு எந்தக் காலத்திலும் எதுவுமே கிடைத்துவிடக் கூடாதென்னும் நோக்கில் செயலாற்றிவரும் தமிழர் விரோத சக்திகள் வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளிலும் தங்களின் நிகழ்ச்சிநிரலை புகுத்த முயற்சிக்கின்றனர். இது மிகவும் ஆபத்தானது.

இதன் காரணமாக தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளும் திசைதிருப்பப்படுகின்றன. அண்மைக்காலத்தில் இடம்பெற்ற ஜனநாயக எதிர்ப்பு நடவடிக்கைகள் அனைத்தின்போதும் தீய சக்திகள் உள்நுழைய முயற்சித்தன. உள்நுழைந்து தங்களின் நிகழ்ச்சிநிரலை புகுத்த முற்பட்டன. பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரை தொடக்கம் அண்மையில், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்திருந்த பேரணி வரையில் தீய சக்திகளின் நிழல் இருந்தது. தீயசக்திகளின் உள்நோக்கங்களை அறியாமல் பலரும் வீழ்ந்துவிடுவதுமுண்டு. பல்கலைக்கழக மாணவர்களின் பேரணியின்போதும் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிரான கோஷங்களை முன்வைப்பதற்கு தீய சக்திகள் முயன்றிருந்தன. தென்னிலங்கையின் சிங்கள - பௌத்தவாதிகள் எதிர்த்துவரும் ஒன்றை வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் நலன்களுக்காக இயங்குவதாகக் கூறுபவர்கள் எதற்காக எதிர்க்க வேண்டும்? இவர்கள் யாருடைய நலன்களுக்காக செயலாற்றுகின்றனர்?

வடக்கு - கிழக்கை மையப்படுத்தி இடம்பெறும் விடயங்களை நோக்கினால் ஒரு விடயம் தெளிவாகும். அதாவது, இங்கு தடி எடுத்தவரெல்லாம் தண்டல்காரர்கள் என்பது போல் - ‘கடிதத் தலைப்பு சிவில் சமூகங்கள்’ பெருகிவிட்டன. ஒவ்வொருவரும் தங்களின் நோக்கங்களை நிறைவு செய்து கொள்வதற்காக மக்களை பகடைகளாக உருட்ட முற்படுகின்றனர். தமிழ்த் தேசியம் பேசும் பிரதான அரசியல் கட்சிகளின் இயலாமையே இதற்கான பிரதான காரணமாகும். தலைமைகள் என்போர் உறுதியாகவும் தெளிவாகவும் இருந்தால் இவ்வாறான அரசியல் சீர்கேடுகள் இடம்பெறாது. ஆனால், அரசியல் தலைமைகள் என்போர் பாம்புக்கு தலையையும் மீனுக்கு வாலையும் காண்பிக்கும் நிலையிருப்பதால், சிவில் சமூகமெனும் பெயரில் அறிக்கைகளை வெளியிடுவோர் எதையும் பேசும் துணிவை பெறுகின்றனர். ஏனெனில், அவர்களளின் விஷமத்தனமான அறிக்கைகளை காட்டமாக எதிர்க்கும் துணிவை அரசியல் தலைவர்கள் என்போர் வெளியிடுவதில்லை. 13 எதிர்ப்பு கதைகளின் மூலம் - தங்களை தேசியவாதிகளாகக் காண்பிக்க முற்படும் தீயசக்திகள் எதிர்வரும் 25ஆம் திகதி கடையடைப்பை தங்களின் தீய நோக்கங்களுக்காக பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றன. கட்சிகள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

*ஆயிரம் முகங்களைக் கொண்ட மனிதன்*

# நீதியைக் கேலி செய்வது மற்றும் சதிக் கோட்பாடுகளை எரிபொருளாக்குதல்

**கஜயா**

*எனது கருத்துப்படி, ஈஸ்டர் தாக்குதல் பற்றி ஒரு சுருக்கமானதும் விளக்கமானதுமான ஒரு கதையை உருவாக்குவது பொருத்தமாக இருக்கும், அவ்வாறு உருவாக்கப்படும் கதை நம் நினைவில் இருக்க வேண்டும். இன்றைய நாள் இலங்கையில் இடம்பெற்ற அந்த மனிதாபிமானமற்ற படுகொலையின் நான்காவது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது, மேலும் சமீபத்தில் கசிந்த ஓர் ஆவணத்தின் மூலம் குற்றவாளி அவர்களின் நோக்கங்களை நிறைவேற்றும் போது ஒரு துறவியின் முகமூடியை வெளிப்படுத்த முடியும் என்பதும் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.*

*பயங்கரவாதி அபூபக்கர் அல்-பக்தாதி கலிபாவை கொல்லப்பட்டதாக அறிவித்த போது, அது இறுதியில் உலகெங்கிலும் உள்ள ஆயிரக்கணக்கான இளைஞர்களை தீவிரவாதிகளாக மாற்றத் தூண்டியது என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். இருப்பினும், குறுகிய காலத்தில், அவர்களின் கற்பனைகள் உடைந்து, இந்த வெறித்தனமான பயங்கரவாத அமைப்பின் வேதனையான உலகம் வெளிப்பட்டதுடன் அவர்களால் பின்னர் அதனைப் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் இருந்தது.*

*அதே சமயம், பல்லின கலாசார மற்றும் பல இன சகவாழ்வுக்கு பெயர் பெற்ற அழகிய தீவு நாடான இலங்கையில் நடந்த விடயத்தினை நாம் அவதானித்தால் சமூகத் தேவைகளுக்கு ஏற்றவாறு மாறுவேடமிடத் தெரிந்த ஒருவர் சேவ் தி பேர்ல் என்ற அரச சார்பற்ற நிறுவனத்தை நிறுவியிருந்தார்.*

*ஆனால் ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் அது ஒரு பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்யப்பட்டது. அந்த ஐந்து வருடங்கள் என்பவை இலங்கைக்கு மிகவும் முக்கியமான வருடங்களாகும். ஆயிரம் முகங்கள் கொண்ட மனிதன் எங்கு நோக்கினாலும் ஊடுருவ முடியும். சேவ் தி பேர்ல் என்ற அலங்காரத்தின் பெயர் இலங்கைக்கு ஒத்ததாக இருந்தாலும், இந்த அமைப்பினது நடவடிக்கைச் செயற்பாடுகள் அனைத்துமே அழகிய தீவான இலங்கை எனும் முத்தை அழிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளன.*

*சேவ் தி பேர்ல் என்ற இந்த தன்னார்வ தொண்டு நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது முதல் அதன் நிதி ஆலோசகராக பணியாற்றியவர் தான் ஷங்ரிலா ஹோட்டலில் தன்னைத் தானே வெடிக்கச் செய்த முகமது இன்சாப் ஆவார்.*

*அத்துடன், 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறுதினத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களுக்குக் காரணமெனக் கூறப்படும் அதன் தலைவரான சஹ்ரானின் மனைவியான பாத்திமா ஹதியாவின் வாக்குமூல அறிக்கைகளில் ஒரு சுவாரஸ்யமான உண்மை வெளிப்பட்டது. ஆயிரம் முகங்களைக் கொண்ட இவர் 2016ஆம் ஆண்டு முதல் சஹ்ரானின் சட்ட ஆலோசகராகப் பணியாற்றினார். அவர் ஒருமுறை புத்தளத்தில் சஹ்ரானுடன் மத்ரஸாவில் குழந்தைகளை மூளைச் சலவை செய்யச் சென்றதாகவும் கூறப்படுகின்றது.*

*கல்கிசையில் உள்ள ட்ராபிகல் இன் விடுதியில் தற்கொலைப் படை பயங்கரவாதி ஜமீலுடன் அவர் நெருங்கிய உறவைப் பேணி வந்தார் என்பது உண்மைகளுடன் நிரூபிக்கப்பட்டது. அத்துடன், தெமட்டகொடையில் வெடிகுண்டு வெடித்த வீடு அவர்கள் அனைவருக்கும் ஒரு முக்கியமான சந்திப்பாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.*

*அங்கு அவர்கள் இலங்கை முத்தை எவ்வாறு அழிப்பது என்பது பற்றி அதிகம் கலந்துரையாடியிருந்தனர். மாவனெல்லையில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் என்ற அமைப்பினது சந்தேக நபர்களுக்கு ஆயிரம் முகங்கள் கொண்ட அந்த நபரிடம் சஹ்ரான் சட்ட உதவி கோரியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.*

*எனினும் இந்த உண்மைகளைப் பற்றி யாரும் பேசுவதில்லை. பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் அல்லது அவரது ஊதுகுழல்களான சிறில் காமினி பெர்னாண்டோ அல்லது ரொஹான் டி சில்வா எங்கே? ஆயிரம் முகம் கொண்ட மனிதனிடம் ஏன் அவர்களால் அந்தக் கேள்விகளைக் கேட்க முடியாது? சமூக சீர்திருத்தங்களை கற்பிக்கவும், அரசு இயந்திரத்தின் தவறுகளை சுட்டிக் காட்டவும் அவர் மற்ற “சிவில் சமூக ஆர்வலர்களுடன்” இந்த நாட்களில் தொலைக்காட்சித் திரைகளிலும் பிற பொது களங்களிலும் எப்படி வருகிறார் என்பதைப் பார்ப்பது நகைப்பிற்குரிய விடயமாக இருக்கிறது.*

*இவ்வாறுதான் இந்தியப் பெருங்கடலில் இருக்கின்ற இலங்கை எனும் முத்து கேலித் தீவாக மாறியது. உண்மையான குற்றவாளியை வைத்துக்கொண்டு நம் வீடுகளில் பால் கறக்கும் போது நாம் அனைவருமே வீண் பேச்சுக்களில் வல்லவர்கள் என்பதை நிருபித்துக் கொண்டு இருக்கின்றோம்.*

*எனவே, அந்த ஆயிரம் முகங்கள் கொண்ட மனிதன், இலங்கையினது அமைப்பை எப்படி மாற்றுவது, நல்லாட்சி என்றால் என்ன என்பதைத் தொடர்ந்தும் கற்றுத் தருவான். விரைவில் அல்லது பின்னர், அவர் சிறந்த மனித உரிமைகள் விருதுகளுக்கான பரிசு பெறுவார். இந்த நாட்டை, தன் உள்ளங்கையில் சூழ்ச்சி செய்து ஆட வைக்க முடியும் என்பது அவருக்கு நன்கு தெரியும்.*


*ஆயிரம் முகங்களைக் கொண்ட அந்த மனிதனுக்கும் அவனுடைய உறவினர்களுக்கும் இது நன்றாகத் தெரியும். இந்த தேசத்தை உண்மையான தீமையிலிருந்து பாதுகாக்க கடினமாக உழைத்தவர்கள் பரிதாப மனிதர்களாக மாறுகிறார்கள்.*

*அதே நேரத்தில் ஆயிரம் முகங்கள் கொண்ட மனிதன் மற்றும் அவரது படுக்கையில் இருப்பவர்கள் “உண்மையான தேசபக்தர்கள்“ என்று போற்றப்படுகிறார்கள். என்ன ஒரு சோகமான உண்மை இது.*

*எனவே இந்தச் சதியை வெளிக்கொண்டு வருவதற்கு நீங்கள் தயாரா? அப்படியானால், மேலே குறிப்பிட்டுள்ள உண்மைகளை ஆழமாக ஆராய்வோம் வாருங்கள் நண்பர்களே........*

*(கொழும்பு கார்டியன்)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஏப்ரல் - 22 சனிக்கிழமை
சுபகிருது வருடம் - சித்திரை 09
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : திரிதியை



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. வாடிக்கையாளர்கள் கவரும்படி சலுகைகளை அறிவிப்பீர்கள். அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**இடபம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மிதுனம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். லாபம் பெறும் நாள்.

**கடகம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். சாதித்துக் காட்டும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும்.வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். நயமாகப் பேசி வசூலிக்கப் பாருங்கள். பொறுமை நாள்.

**துலாம்**
கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயமும் உண்டு. திறமைகள் வெளிப்படும் நாள்.

**விருட்சிகம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். யோகம் கிட்டும் நாள்.

**தனுசு**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**மகரம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். சகோதரி உதவுவார். தாயாருடன் கருத்து மோதல்கள் வரக்கூடும். வியாபாரம் தழைக்கும். நன்மை கிட்டும் நாள்.

**கும்பம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். பழைய சரக்குகள் தீரும். உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும் நாள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். நீண்ட நாள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். புதிய முயற்சிகள் பலிதமாகும். மகிழ்ச்சியான நாள்.

### கூட்டணி கட்சிகளின் எதிர்புக்கு மத்தியில்

# 12 மணி நேரம் வேலை; பிரேரணை நிறைவேற்றம்!

சென்னை,ஏப். 22

தனியார் நிறுவனங்களில் 12 மணி நேரம் பணியாற்றும் சட்டப் பிரேரணை கூட்டணி மற்றும் எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் சட்டப்பேரவையில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

தனியார் நிறுவனங்களில் வேலை நேரத்தை 8 மணி நேரத்திலிருந்து 12 மணி நேரமாக உயர்த்துவது தொடர்பான சட்ட பிரேரணை தொழிலாளர் நலத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் பேரவையில் நேற்று தாக்கல் செய்தார்.

இதற்கு காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ம. தி. மு. க. உள்ளிட்ட ஆளும் கூட்டணி கட்சிகளே எதிர்ப்பு தெரிவித்தன. மேலும் இந்தப் பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவித்து கட்சிகள் வெளிநடப்பு செய்தன.

எனினும், கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் 12 மணி நேர வேலை மசோதா பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

பின்னர் இதுகுறித்து விளக்கமளித்த அமைச்சர், 'வாரத்தில் 48 மணி நேரம் பணி இருக்கும். நான்கு நாள்கள் 12 மணி நேரம் வேலை செய்தால் மற்றொரு நாள் கூடுதலாக விடுமுறை அளிக்க வேண்டும். ஒருவேளை கூடுதலாக வேலை செய்தால் கூடுதல் ஊதியம் வழங்க சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் தேவைப்படும் தொழில் நிறுவனங்களுக்கு மட்டுமே இது பொருந்தும்' - என்று கூறியுள்ளார். (ஐ)

# காங்கிரஸ் கட்சியின் போராட்டம் தலைவர்களின்றி பிசுபிசுத்தது!

சென்னை, ஏப். 22

சிறை தண்டனை காரணமாக ராகுல் எம். பி. பதவி இழந்த விவகாரத்தில் பா. ஜ. கவை கண்டித்து மத்திய அரசு அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டத்தை நேற்று முன்தினம் நடத்தத் திட்டமிட்டது.

திட்டமிட்டபடி நேற்று முன்தினம் நடந்த போராட்டத்தில் திரண்டவர்கள் குறைவாக இருந்ததால் முற்றுகை போராட்டத்தை நடத்த முடியவில்லை. அதற்கு பதிலாக பொலிஸார் காட்டிய இடங்களில் ஆர்ப்பாட்டம் நடத்தி விட்டு காங்கிரஸார் கலைந்தனர்.

தமிழக காங்கிரஸ் தலைவர் அழகிரி தனது மகளின் திருமணத்துக்கு அழைப்பிதழ் கொடுக்க மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல் வீட்டுக்கு சென்றிருந்ததால் போராட்டத்தில் பங்கேற்கவில்லை. முன்னாள் தலைவர்கள் இளங்கோவன், கிருஷ்ணசாமி உடல்நல பாதிப்பு காரணமாக வரவில்லை.

முன்னாள் தலைவர் தங்கபாலு மயிலாப்பூரில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றார். கோஷ்டி தலைவர்கள் சிலர் வெயில் காரணமாக புறக்கணித்தனர் என்று கூறப்படுகிறது. கர்நாடக தேர்தல் பணிக்காக பெங்களூரு சென்றுள்ளதால் எம்.எல்.ஏ.க்களும் பங்கேற்கவில்லை. இதனால், காங்கிரஸின் போராட்டம் பிசுபிசுத்துப் போனது. (ஐ)

# வன்முறையே இல்லாத மாநிலமாக தமிழ்நாடு!

### முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, ஏப். 22

"தமிழகத்தில் தி. மு. க. அரசு பொறுப்பேற்றதில் இருந்து குற்ற செயல்கள் குறைந்துள்ளன. குற்றவாளி யாராக இருந்தாலும், எந்தக் கொம்பனாக இருந்தாலும் காப்பாற்ற மாட்டோம்", என்று உறுதி கூறுகிறேன் என சட்டசபையில் முதல்வர் ஸ்டாலின் நேற்று சட்டசபையில் கூறினார்.

துறை ரீதியிலான சாதனையை நெஞ்சை நிமிர்த்தி சொல்லும் அளவுக்கு உள்ளது தி. மு. க. அரசு. இனி தமிழகத்தை நிரந்தரமாக தி. மு. கதான் ஆள வேண்டும் என மக்கள் மனநிறைவோடு முடிவு எடுக்கும் வகையில் ஆட்சி நடத்தி வருகிறோம். கடுமையான நிதி நெருக்கடியான சூழலிலும் மகத்தான சாதனை புரிந்துள்ளது. ஓர் அரசு மக்கள் நலன் அரசாகவும், கொள்கை சார்ந்த அரசாகவும் இருக்க வேண்டும். மக்கள் ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு வகையில் அரசு நன்மை செய்து வருகிறது என்பதை தலை நிமிர்ந்து சொல்ல முடியும்.

இந்தியாவே வியக்கும் அளவுக்கு தமிழகத்தில் ஆட்சி செய்கிறது தி. மு. க. ஆதரித்தாலும் எதிர்த்தாலும் மக்களுக்காக பேசுவதாக ஏற்றுக்கொள்கிறது தி. மு. க. அரசு. மாநில உள்நாட்டு உற்பத்தி 6.11 சதவீதம் உயர்ந்துள்ளது. இலவச மின்சாரம் கிடைக்கிறது, பாடசாலை செல்லும் மாணவர்களின் முகத்தில் மலர்ச்சி காணப்படுகிறது. திராவிட மொடல் என்ற கோட்பாட்டின் அரசாக இருக்கிறது. மொழி உரிமை, இன உரிமை என்பதே சாசனம். தமிழகத்தில் சாதி, மத சண்டைகள், கூட்டு வன்முறை, துப்பாக்கிச்சூடு, காவல்நிலைய மரணங்கள், கலவரம் என இல்லை, இல்லை என சொல்லலாம் - என்றார். (ஐ)

# மன்னிப்பும் கேட்கமாட்டேன்; இழப்பீடும் தரமாட்டேன்!

### அண்ணாமலை தெரிவிப்பு

சென்னை, ஏப். 22

தி. மு. கவினரின் சொத்துப் பட்டியல் என்ற பெயரில் ஒரு பட்டியல் வெளியிட்ட விவகாரத்தில், தி. மு. க. அனுப்பிய சட்ட அறிவித்தலுக்கு பதிலளித்திருக்கும் பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை மன்னிப்புக் கேட்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.

சென்னையில் கடந்த வாரம், செய்தியாளர்களை சந்தித்த தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை, தி. மு. கவினரின் சொத்துப் பட்டியல் என்று கூறி ஒரு பட்டியலை வெளியிட்டிருந்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, தி. மு. கவின் அமைப்புச் செயலாளர் ஆர். எஸ். பாரதி, வழக்குரைஞர் மூலம், அண்ணாமலைக்கு சட்ட அறிவித்தல் அனுப்பியிருந்தார்.

அந்த அறிவித்தலில், அண்ணாமலை தரப்பில், தி. மு. கவினர் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு மன்னிப்பு கேட்க வேண்டும், மேலும், ரூ. 500 கோடி இழப்பீடு வழங்க வேண்டும். இன்னும் 48 மணி நேரத்துக்குள் மன்னிப்புக் கோராவிட்டால், வழக்குத் தொடரப்படும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இதற்கு அண்ணாமலையின் வழக்குரைஞர் சார்பில் வெளியிடப்பட்டிருக்கும் பதிலில், தி. மு. கவின் அறிவிப்பில் கூறப்பட்டபடி, ரூ. 500 கோடியை இழப்பீடாகக் கொடுக்க முடியாது, மன்னிப்பும் கேட்க முடியாது. தி. மு. க.மீது தாங்கள் அளித்த குற்றச்சாட்டில் உண்மை இருக்கிறது - என்றுள்ளது.

ஈழநாடு



# அடக்குமுறையால் மக்களை ஒடுக்கவே புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்!

## களனி பல்கலை விரிவுரையாளர் சாடல்

கொழும்பு, ஏப். 22

**நாட்டில் பொருளாதார நெருக்கடி ஒன்று ஏற்படும் போது ஆட்சியாளர்கள் இரண்டு வகையான உபாயங்களை பையாள்வார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் அடக்குமு றையை பயன்படுத்தி மக்களை ஒடுக்குவதற்கான வழிவகைகளைச் செய்துவருவது அதில் ஒருவகையாகும்.**

அதற்காகவே தற்போது புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன் ஜனாதிபதி அண்மையில் தெரிவித்திருந்த கருத்து பல்கலைக்கழக பேராசிரியர்களின் போராட்டத்தை அடக்கும் வகையில் அமைந்துள்ளது என களனி பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ்.சிவகுருநாதன் தெரிவித்தார்.

ஜனநாயகத்துக்கான சிவில் சமூக கூட்டமைப்பு நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- பயங்கரவாத தடைச்சட்டம் 1979ஆம் ஆண்டு வடக்கில் இருக்கும் பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்காக கொண்டுவரப்படுவதாக தெரிவித்தே கொண்டுவரப்பட்டது. ஆனால் சுமார் 44 வருடங்களாக இந்த சட்டம் இருந்து வருகிறது.

இந்த சட்டத்தினால் தமிழ் மக்கள் எவ்வாறு அடக்கி ஒடுக்கப்பட்டார்கள் என்பது அந்த மக்களுக்கு தெரியும். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 3பேர் 14 வருடங்களுக்கு பின்னர் அண்மையில் விடுவிக்கப்பட்டிருந்தார்கள்.

ஆனால் தற்போது அரசாங்கம் வர்த்தமானிப்படுத்தி இருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் பயங்கரவாத தடைச் சட்டத்தைவிட பயங்கரமானது.

ஏனெனில் உத்தேச சட்டமூலத்தில் பயங்கரவாதத்துக்கு சரியான வரைவிலக்கணம் தெரிவிக்கப்படவில்லை. பொதுவாக உலகில் எங்கும் பயங்கரவாதம் என்றால் இதுதான் என விரைவிலக்கணம் தெரிவிக்கப்பட்டதில்லை.

அதனால் ஆட்சியாளர்கள் தங்களுக்கு எதிராக யாராவது குரல் எழுப்பினால் அதனை பயங்கரவாதம் எனத் தெரிவித்து அவர்களை கைது செய்ய முடியுமான நிலை இந்த சட்டமூலத்தின் மூலம் ஏற்படுகின்றது.

அத்துடன் நாட்டில் பொருளாதார நெருக்கடி ஒன்று ஏற்படும்போது ஆட்சியாளர்கள் இரண்டு வகையான உபாயங்களை பையாள்வார்கள். அதாவது, பொதுமக்களின் பிரச்னைகளை கேட்டறிந்து அவர்களுடன் கலந்துரையாடல்களை ஏற்படுத்தி, பிரச்னைக்கு தீர்வு காண்பது.

அடுத்ததாக பொருளாதார நெருக்கடி ஏற்படும்போது தங்களின் ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி அடக்குமுறை கையாள்வதாகும்.

அதன் பிரகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் தற்போது அடக்குமுறையை பயன்படுத்தி மக்களை ஒடுக்குவதற்கான வழிவகைகளையே செய்து வருகிறது. அதற்காகவே தற்போது புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக ஜனாதிபதி ரணில் பல்கலைக்கழக பேராசிரியர்கள் முன்னெடுத்துவரும் போராட்டத்தை அடக்கும் வகையில் கருத்து தெரிவித்திருந்தார்.

தொழிற்சங்கங்கள் முன்னெடுக்கும் போராட்டத்தை ஒரு வாரத்துக்குள் முடிவுக்கு கொண்டுவராவிட்டால் அந்த தொழிற்சங்கங்களை தடை செய்வேன், அவர்களின் சேவையை அத்தியாவசியமாக பிரகடனப்படுத்துவேன், குறித்த தொழிற்சங்கத் தலைவர்கள் அல்லது உறுப்பினர்களது தனிப்பட்ட சொத்துக்களை அரசுடமையாக்குவேன் என தெரிவித்திருந்தார்.

இது தொழிற்சங்கங்களை அச்சுறுத்தும் நடவடிக்கையாகும். பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் அனுமதிக்கப்பட்டால் இவ்வாறான நிலையே ஏற்படும்.

எனவே நாட்டில் மக்களின் ஜனநாயகம், அடிப்படை உரிமைகளை மீறும் வகையிலேயே பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டிருக்கிறது- என்றார்.

(அ)

# தேசிய கடன் மறுசீரமைக்கப்படில் வங்கி கட்டமைப்பு பாதிக்கப்படும்

## நாலக கொடஹேவா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 22

கடன் மறுசீரமைப்பில் தேசிய கடன் மறுசீரமைக்கப்பட்டால் வங்கி கட்டமைப்பு பாதிக்கப்படும். அதனால் வங்கி வைப்பாளர்கள், முதலீட்டாளர்கள் பாதிக்கப்படுவார்கள்.

சர்வதேச நாணய நிதிய நிபந்தனையின் உண்மை தன்மையை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைத்துவிட்டது, பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கண்டு விட்டோம் என குறிப்பிட்டு அரசாங்கம் நாட்டு மக்களை தவறாக வழிநடத்துகிறது.

சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தின் உண்மைத்தன்மையை நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்தவேண்டும்.

அரசமுறை கடன்களை மீள செலுத்த முடியாத நிலை ஏற்பட்டதை தொடர்ந்து அரசாங்கம் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி வங்குரோத்து நிலை அடைந்துவிட்டோம் என அறிவித்தது.

சர்வதேச நாணய நிதியத்தின் நான்கு ஆண்டு காலத் தவணை அடிப்படையில் 2.9 பில்லியன் டொலர் கிடைப்பனவுக்கான சாத்தியம் கிடைத்தவுடன் வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு விட்டோம் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஐந்தாண்டு காலப்பகுதிகளில் மாத்திரம் 25 பில்லியன் டொலர் கடன் மீள செலுத்தவேண்டும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

எதிர்வரும் ஐந்து ஆண்டு காலப்பகுதிகளில் பிரதான நிலை கடன் வழங்குநர்களுக்கு செலுத்த வேண்டிய கடன்களை மறுசீரமைக்கும் விடயத்தில் சர்வதேச நாணய நிதியம் தலையிடாது.

கடன் மறுசீரமைப்புக்களை அரசாங்கம் தனித்து மேற்கொள்ள வேண்டும். 14 பில்லியன் டொலர் கடனை மறுசீரமைக்க பிரதான நிலை கடன் வழங்குநர்கள் இணக்கம் தெரிவிக்கமாட்டார்கள்.

கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் சகல கடன் வழங்குநர்களும் சமமாக மதிக்கப்படுவார்கள், எவருக்கும் விசேட சலுகை வழங்கப்படமாட்டாது என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகிய அரச வங்கிகள் அரசாங்கத்துக்கு கடன் வழங்கியுள்ளன. தேசிய கடன் மறுசீரமைக்கப்பட்டால் வங்கி கட்டமைப்பு பாதிக்கப்படும் இதனால் வங்கி வைப்பாளர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் பாதிக்கப்படுவார்கள்.

பொருளாதார பாதிப்பில் இருந்து மீள்வதற்கு கடன் பெறுவது மாத்திரம் ஒரு தீர்வாக அமையாது. தேசிய வருமானத்தை அதிகரித்துக் கொள்ள பொது கொள்கைத் திட்டம் ஒன்று வகுக்கப்படவேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் உறுதிப்பாட்டை முன்னிலைப்படுத்தி உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட சர்வதேச நிதி நிறுவனங்களிடம் கடன் பெறுவதை காட்டிலும் மாற்றுத் திட்டங்கள் ஏதும் அரசாங்கத்திடம் இல்லை.

அரச நிர்வாகத்தில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய எடுத்த தவறான தீர்மானங்களையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்கிறார். கடன் பெறுவது, அரச நிறுவனங்களை விற்பது, தேசிய வளங்களை விற்பது ஆகியவையே பொருளாதார மீட்சிக்கான அரசாங்கத்தின் கொள்கையாக உள்ளது-என்றார்.

(அ)

# வியட்நாமில் தங்க வைக்கப்பட்ட 23 இலங்கையர்கள் நாடு கடத்தல்

கொழும்பு, ஏப். 22

சட்ட விரோதமாக கடல் மார்க்கமாக வெளிநாடு செல்ல முற்பட்ட 23 இலங்கையர்கள் வியட்நாமிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

303 இலங்கையர்களுடன் வியட்நாம் கொடியுடன் சென்ற மீன்பிடிப்படகொன்று கடந்த ஆண்டு நவம்பர் 7ஆம் திகதி வியட்நாம் கடற்பரப்பில் விபத்திற்குள்ளானது.

இது குறித்து இலங்கைக் கடற்படை தலைமையகத்துக்கு கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து பாதுகாப்பாக மீட்கப்பட்ட குறித்த இலங்கையர்கள், வியட்நாமில் அகதிகளாக தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு தங்க வைக்கப்பட்டிருந்தவர்களில் 151 பேர் கடந்த ஆண்டு டிசெம்பர் 28ஆம் திகதி நாட்டை வந்தடைந்தனர். எஞ்சிய 23 பேரும் கடந்த புதன்கிழமை நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். இவர்களில் 19 - 50 வயதுக்கு இடைப்பட்ட 6 பெண்களும் , 15 ஆண்களும், 18 வயதுக்கு குறைவான இருவரும் உள்ளடங்குகின்றனர்.

இவர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகள் குடிவரவு - குடியகல்வு திணைக்களம் உள்ளிட்ட உரிய தரப்பினரால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கடற்படை ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

(அ)



# வவுனியா வடக்கில் காற்றுடன் கனமழை!

## 1500 இற்கு மேற்பட்ட பப்பாசிகள் அழிவு

வவுனியா, ஏப். 22

வவுனியா வடக்கில் கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக 1500 இற்கு மேற்பட்ட பப்பாசி மரங்களும், பயன்தரு ஏனைய மரங்களும் அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடும் வெப்பத்துக்கு மத்தியில் வவுனியா வடக்கில் நேற்று முன் தினம் மாலை திடீரென கடும் காற்றுடன் மழை பெய்துள்ளது.

இதன்போது, வவுனியா வடக்கு ஒலுமடு கிராமத்தில் வசிக்கும் விவசாயி ஒருவரின் தோட்டத்தில் காய்த்து அறுவடைக்கு சில வாரங்களே இருந்த 1500 பப்பாசி மரங்கள் காற்றில் முறிந்து விழுந்து அழிவடைந்துள்ளன.

அத்துடன், ஒலுமடு கிராம அலுவலர் பிரிவில் உள்ள விவசாயிகள் பலரின் வாழ்வாதாரமாக இருந்த பப்பாசி, வாழை, புகையிலை, கத்தரி உள்ளிட்ட பயன்தரு மரங்களும் காற்றில் முறிந்து அழிவடைந்துள்ளன.

தமது வாழ்வாதாரமாக மேற்கொண்ட பயிர்கள் அழிவடைந்தமை காரணமாக விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

(அ)

# கம்பளை சிறுவர் இல்லத்தில் 2 சிறுமிகளை காணவில்லை!

கொழும்பு, ஏப். 22

கம்பளையில் சிறுவர் இல்லத்தில் இருந்த 9 மற்றும் 15 வயதுடைய இரு சிறுமிகள் காணாமல் போயுள்ளமை தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று முன்தினம் 4.30 மணி முதல் குறித்த இரு சிறுமிகளும் சிறுவர் இல்லத்தில் காணப்படவில்லையென பொறுப்பாளர்களினால் செய்யப்பட்ட பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய சிறுவர் நன்நடத்தை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களூடாக குறித்த சிறுவர் இல்லத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த நிலையிலேயே 10 நாட்களின் பின்னர் அவர்கள் காணாமல்போயுள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக கம்பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# நாட்டை நாசமாக்கிய மகிந்தவுடன் இனி ஒருபோதுமே சேரமாட்டோம்!

## விமல் வீரவன்ஸ திட்டவட்டம்

கொழும்பு, ஏப். 22

நாட்டை நாசமாக்கிய மகிந்த தலைமையிலான அணியுடன் ஒருபோதும் இணையமாட்டோம் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் அந்தப் பக்கம் இந்தப் பக்கம் மாறினாலும் கொள்கை மாறவில்லை. அதுதான் முக்கியம். ஜே.வி.பியின் உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி ஓரிடத்தில் பேசுகின்றார் அரசு சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லவேண்டும் என்று. இன்னோர் இடத்தில் பேசுகின்றார் அரசு சர்வதேச நாணய நிதியத்திடம் போகக்கூடாது என்று. அவர்கள் ஓரிடத்தில் இருந்தாலும் கொள்கையில் நிலையாக இல்லை.

நாங்கள் இடம் மாறினாலும் கொள்கை மாறவில்லை. கொள்கைதான் முக்கியமே தவிர இடமல்ல. இது எமக்கு சாதகமான கொள்கை அல்ல. இதனால் எதிரிகள் அதிகம் வளருவார்



கள். எதிர்ப்புகள் கூடும். எமக்கு எதிரான தாக்குதல்கள் கூடும். உயிர் ஆபத்து ஏற்படக்கூடிய வாய்ப்புகளும் உள்ளன.

நாட்டை நாசமாக்கிய மகிந்த தலைமையிலான அணியுடன் இணையமாட்டோம். அது ஒருபோதும் நடக்காது - என்றார். (அ)

# அரிசி விலையை மேலும் குறைக்க முடியாது!

கொழும்பு, ஏப். 22

அரிசி விலையை மேலும் குறைக்க முடியாது என, இலங்கையின் முன்னணி அரிசி வர்த்தகர்களில் ஒருவரான டட்லி சிறிசேன தெரிவித்தார்.

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வலுப்பெற்றுள்ள போதிலும், மூலப்பொருட்களின் விலை காரணமாக, ஒரு கிலோகிராம் அரிசியை உற்பத்தி செய்வதற்கான செலவில் மாற்றம் ஏற்படவில்லை என ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோது அவர் குறிப்பிட்டார்.

220 ரூபாவுக்கு அரிசி விலையை நிர்ணயம் செய்த போது, டீசல் லீற்றர் ஒன்றின் விலை 112 ரூபாவாகவும், மின் அலகு ஒன்றிற்கான கட்டணம் 16 ரூபாவாகவும், வங்கிகளின் வட்டி வீதம் 8 வீதமாகவும் இருந்தது.

தற்போது, அரிசி 220 ரூபாவாக உள்ள நிலையில், டீசல் லீற்றர் ஒன்றின் விலை 380 ரூபாவாகவும், மின் அலகு ஒன்றிற்கான கட்டணம் 75 ரூபாவாகவும், வங்கிகளின் வட்டி வீதம் 28 வீதமாகவும் உள்ளது.

எனவே, மக்களுக்கு வழங்க வேண்டிய சலுகையை வழங்குவதற்கான முறைமை ஒன்று இல்லை என டட்லி சிறிசேன கூறினார். (அ)

# கடும் வெப்பமான காலநிலை மாத இறுதி வரை நீடிக்கலாம்!

கொழும்பு, ஏப். 22

நிலவும் வெப்பமான காலநிலை இம்மாத இறுதி வரை நீடிக்கலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தற்போதைய சூழ்நிலையில் பெரியவர்கள் மற்றும் சிறுவர்களும் தண்ணீர் அருந்துவது அத்தியாவசியமானது என கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

பாடசாலைகளுக்கு சிறுவர்களை அனுப்பும் பெற்றோர், குறைந்த இரண்டு தண்ணீர் போத்தல்களையேனும் அவர்களுக்கு கொடுத்து அனுப்ப வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

நிறமூட்டப்பட்ட செயற்கைப் பானங்களை தவிர்த்து, நீர் உள்ளிட்ட இயற்கையான பானங்களை அதிகளவில் அருந்த வேண்டும்.

குறைந்த நாளொன்றில் இரண்டு முறையாவது நீராட வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், காலை 10 மணி முதல் மாலை 3 வரையான காலப்பகுதியினும், அதிகளவில் வெளியில் நடமாடுவதனை தவிர்த்துக் கொள்ளுமாறு சுகாதார மேம்பாட்டுப் பணியகம் கோரியுள்ளது. (அ)

# 2022 உயர்தர மாணவர்களின் பெற்றோர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையீடு

கொழும்பு, ஏப். 22

2022ஆம் கல்வி ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் பெற்றோர்களினால், மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளில் தாமதம் ஏற்படுவதால் தமது பிள்ளைகளுக்கு அநீதி இழைக்கப்படுவதாக குறித்த பெற்றோர்கள் குற்றம் சுமத்தி இந்த முறைப்பாட்டைத் தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, 2022ஆம் கல்வி ஆண்டின், 05ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், மாணவர்களை 06ஆம் தரத்துக்கு பாடசாலைகளுக்கு அனுமதிப்பதற்கான, மேன்முறையீடுகளை சமர்ப்பித்தல் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 8ஆம் திகதி நள்ளிரவு 12 மணிவரையில், இணையத்தள முறைமையில், மேன்முறையீட்டை சமர்ப்பிக்க முடியும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

# ஆசிரியர்களை அச்சுறுத்துவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை

## ஜோசப் ஸ்டாலின் கண்டனம்

கொழும்பு, ஏப். 22

கல்வியை கட்டாய சேவையாக்கவோ, அவசரகாலத்தின் கீழ் பரீட்சை குழுவை அமர்த்தவோ, பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதிலிருந்து விலகும் ஆசிரியர்களுக்கு எதிராக வழக்குத் தொடரவோ அல்லது அவர்களது சொத்துக்களை அபகரிக்கவோ ஜனாதிபதிக்கு எந்த அதிகாரமும் அதிகாரமும் இல்லை என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் பரீட்சைகள் தாமதப்படுத்தப்படுகிறது.

இந்த ஆசிரியர்களின் பிரச்னையை விவாதம் மூலம் தீர்க்காமல் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களை அச்சுறுத்திய ஜனாதிபதி, இவற்றைச் செய்வதால், இந்த மக்களையும் அச்சுறுத்த முயற்சிக்கின்றாரா என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான பாடப்புத்தகங்கள் இதுவரை விநியோகிக்கப்படவில்லை, பாடசாலை சீருடைகள் முறையாக விநியோகிக்கப்படவில்லை. கல்வியை அத்தியாவசிய சேவையாக மாற்றும் நிலை ஜனாதிபதிக்கு இருந்தால் மேற்கண்ட குறைபாடுகளையும் பூர்த்தி செய்திருக்கவேண்டும்.

கல்வியை அத்தியாவசிய சேவையாக மாற்றும் ஜனாதிபதியின் தீர்மானத்தை அடக்குமுறை நடவடிக்கையாகவே பார்க்க முடியும்-என்றார். (அ)

# ஈஸ்டர் தாக்குதலுக்கு மைத்திரி ஏன் பொறுப்பு கூறவேண்டும்?

## சிறீ லங்கா சுதந்திரக் கட்சி கேள்வி

கொழும்பு, ஏப். 22

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் மேற்கொள்ளப்படவில்லை. அவ்வாறிருக்கையில் அவர் எவ்வாறு இந்தத் தாக்குதல்களுக்கு பொறுப்பு கூறவேண்டியவராகின்றார் என சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர கேள்வியெழுப்பியுள்ளார்.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகக் கூட இந்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். எனவே இதனுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகளை கண்டுபிடிப்பதற்கே முக்கியத்துவமளிக்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சு.க. தொகுதி அமைப்பாளர்களுடனான விசேட சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப்பதாகக் குறிப்பிட்டு ஆட்சியைக் கைப்பற்றிய எவரும் அதனை இதுவரை செய்யவில்லை. இதனால் பாதிக்கப்பட்டுள்ள கத்தோலிக்க மக்கள் தொடர்பில் மிகுந்த கவலையடைகின்றோம்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்ளவில்லை. பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகைக்கு காணப்படுவது வேறு பிரச்னையாகும். அதனை முன்னாள் ஜனாதிபதி மீது திணிப்பது பிரயோசனமற்றது.

இந்த தாக்குதல்களைப் போன்றே, ஏனைய ஆட்சியாளர்களின் காலப்பகுதியிலும் பலர் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் அவற்றுக்கு அன்றைய ஆட்சியாளர்கள் எவரும் பொறுப்பு கூறவில்லை. அத்தோடு முன்னாள் ஜனாதிபதி மற்றும் அவரால் நியமிக்கப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு கோடிக்கணக்கில் இழப்பீடு ஈடு செலுத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டு முதல் நாட்டுக்கு வெளியிலுள்ள சில தரப்பினர் தமக்கு தேவையானவர்களை ஆட்சியில் அமர்த்துவதற்கு ஒத்துழைப்புக்களை வழங்கி வந்தனர். அந்த வகையில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகக் கூட இந்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். இனிவரும் காலங்களிலும் இவ்வாறான நிலைமை ஏற்படக் கூடும்.

எவ்வாறிருப்பினும் இதே நிலைமை தொடர்வதற்கு இடமளிக்காமல் சுயாதீனமாக எமது ஜனாதிபதியை நாமே தெரிவு செய்யும் நிலைமையை உருவாக்க வேண்டும்-என்றார். (அ)

# பதுளையில் 17 வீதமான குடும்பங்கள் உணவுப் பற்றாக்குறையால் பாதிப்பு!

கொழும்பு, ஏப்

பதுளை மாவட்டத்தில் 47,665 குடும்பங்கள் கடுமையான உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளதாக பதுளை மாவட்ட செயலாளர் தமயந்தி பரணகம தெரிவித்தார். இது பதுளை மாவட்ட மக்கள் தொகையில் 17 வீதம் எனவும் தமயந்தி பரணகம குறிப்பிட்டார்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் பதுளையில் இடம்பெற்ற விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துக்கொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

பதுளை மாவட்டத்தில் 5 வயதுக்குட்பட்ட ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 10,873 ஆக காணப்படுவதுடன், இது 5 வயதுக்குட்பட்ட மொத்த குழந்தைகளின் எண்ணிக்கையில் 19 வீதம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும்,உடற்திணிவுச் சுட்டெண் 18 இற்கும் குறைந்த 12 வாரங்கள் பூர்த்தி செய்யப்பட்ட 1,226 கர்ப்பிணிகள் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.(அ)

# அமைச்சுப் பதவி குறித்து பேசக்கூட ஆசையில்லை

## கூறுகின்றார் எஸ். பி. திஸாநாயக்க



**கொழும்பு, ஏப். 22**

**"அமைச்சுப் பதவி பற்றி கதைப்பதற்குகூட ஆசை இல்லை. இனி அதைப்பற்றி கதைக்கப்போவதும் இல்லை." - என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.**

மொட்டு கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது,

"அமைச்சரவை மாற்றம் இடம்பெறவுள்ளதாக தெரியவருகின்றது. எப்போது கல்வி அமைச்சை பொறுப்பேற்கின் றீர்கள்" என எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே எஸ்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

"அது பற்றி எனக்கு தெரியாது. அது குறித்து கதைப்பதற்குகூட விருப்பமில்லை. கருத்து வெளியிடவும் மாட்டேன். பதவியை கேட்டு பெறப்போவதும் இல்லை." எனவும் எஸ்.பி. குறிப்பிட்டார். (அ)

# ஆய்வுக்கு சென்றுள்ள கண் சொட்டு மருந்து!

கொழும்பு, ஏப். 22

கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையில் கண் நோய்க்காக பயன்படுத்தப்பட்டதன் பின்னர், பாதிப்புக்கள் ஏற்பட்டதாக கூறப்படும் ப்ரெட்னிசெலோன் சொட்டு மருந்தின் மாதிரி தேசிய மருந்து கட்டுப்பாட்டு அதிகார சபையின் ஆய்வுகூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த ஔடதத்தின் தரம் தொடர்பில் ஏற்பட்டுள்ள சர்ச்சையை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சொட்டு மருந்து 2021ஆம் ஆண்டு முதல் நாட்டில் பயன்படுத்தப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

அந்த சொட்டு மருந்தைப் பயன்படுத்திய நோயாளர்கள் சிலர் பல்வேறுப்பட்ட பாதிப்புகளுக்கு உள்ளாகினர்.

இதனையடுத்து உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ப்ரெட்னிசெலோன் என்ற கண் சொட்டு மருந்து தொகுதியை மாத்திரம் மீளப்பெறுமாறு சுகாதார அமைச்சு அனைத்து வைத்தியசாலைப் பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

# அதிக வெப்பம் காரணமாக மனநோய் ஏற்படும் அபாயம்

கொழும்பு, ஏப். 22

தற்போது நிலவும் வெப்பமான காலநிலையால் மன உளைச்சல் உள்ளிட்ட மனநல நோய்கள் அதிகரிக்கலாம் என மனநல மருத்துவர் ரூபி ரூபன் தெரிவித்தார்.

இதனால் மக்கள் வன்முறைக்கு உள்ளாக நேரிடும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக மக்கள் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபடலாம் என சுட்டிக்காட்டியுள்ள மனநல மருத்துவர் ரூபி ரூபன், இவ்விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டுமெனவும் சுட்டிக்காட்டினார்.

மனநோய்களுக்கு மருந்து உட்கொள்பவர்களுக்கு தாகம் குறைவதாகவும் அதனால் அவர்கள் நீர்ச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்படுவதாகவும் மனநல மருத்துவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அதிக வெப்பமான காலநிலை காரணமாக குழந்தைகளின் சிந்திக்கும் திறன் குறைவடையக்கூடும் எனவும் இதனால் பிள்ளைகளுக்கு கல்விச் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# மேலும் 10 இலட்சம் முட்டைகள் வந்தன

கொழும்பு, ஏப். 22

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு மில்லியன் முட்டைகளை ஏற்றிய மற்றுமொரு கப்பல் நேற்று முன்தினம் இரவு கொழும்பை வந்தடைந்தது.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் அதன் மாதிரிகளை எடுக்கவுள்ளதாக அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்தார்.

இதன்படி, இந்தியாவிலிருந்து 60 லட்சம் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# ஏழு மாவட்டங்களுக்கு இலவச யூரியா உரம்

கொழும்பு, ஏப். 22

ஏழு மாவட்டங்களில் உள்ள 71,000 விவசாய குடும்பங்களுக்கு தலா 50 கிலோ யூரியா உர மூடைகளை விவசாய அமைச்சு விநியோகிக்க உள்ளது.

அம்பாந்தோட்டை பட்டாஅத்தா விவசாய பூங்காவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, யூரியா உரம் மற்றும் விவசாய உபகரணங்களை அமைச்சிடம் கையளிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வின்போதே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, பொலனறுவை, அம்பாந்தோட்டை, பதுளை, அம்பாறை, மாத்தளை, புத்தளம் மற்றும் குருநாகல் உள்ளிட்ட ஏழு மாவட்டங்களில் - ஹெக்ரேயருக்கும் குறைவான நிலத்தில் நெல் பயிரிடும் விவசாயக் குடும்பங்கள் இந்த இலவச யூரியா உரத்தை பெற தகுதியுடையவர்கள்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு அதிகாரப்பூர்வமாக இந்த ஆண்டு விவசாயிகளுக்கு மானியமாக 15,000 மில்லியன் ரூபா பெறுமதியான யூரியா உரம் மற்றும் விவசாய உபகரணங்கள் இன்று விவசாய அமைச்சுக்கு வழங்கவுள்ளன.

அதிக விளைச்சலை பெற புதிய செய்கை முறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பரசூட் நெல் செய்கை முறையை ஊக்குவிக்க நெல் விவசாயிகளுக்கு உயர்தர நெல்லை வழங்க தேவையான ஆதரவை ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளதாகவும் விவசாய அமைச்சர் தெரிவித்தார்.



# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் புத்தளத்தில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஏப். 22

ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற குண்டுதாக்குதலில் உயிரிழந்தவர்களுக்காக நீதி கோரி புத்தளம் அன்னை மரியாள் தேவாலயத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பதாதைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குண்டுத் தாக்குதலில் உயிர் நீர்த்தவர்களுக்காக திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. (அ)

# ராஜித வெளியேறலாம் கதவை திறந்தது ஐ.ம.ச

கொழும்பு, ஏப். 22

"ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்க முடியாவிட்டால் ராஜித சேனாரத்ன கட்சியிலிருந்து வெளியேறலாம்." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு உறுப்பினரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

"ராஜித சேனாரத்ன எம்முடன் இணைந்து செயற்பட்டவர். எனினும், கட்சியில் இருந்து வெளியேறுவதுபோன்ற அறிவிப்புகளை ஊடகங்களுக்கு வெளியிட்டுவருகின்றார்.

ஒன்று கட்சியில் இருக்கவேண்டும் அவ்வாறு இல்லாவிட்டால் வெளியேற வேண்டும். அப்போது எம்மால் அடுத்தக்கட்ட நகர்வுகளை முன்னெடுக்க கூடியதாக இருக்கும்." எனவும் அஜித் பி பெரேரா குறிப்பிட்டார். (அ)

# நிறை அடிப்படையில் முட்டை விலை உயர்வு

கொழும்பு, ஏப். 22

நிறை அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்பட்டதை அடுத்து, முட்டைகளின் விலை அதிகரித்துள்ளதாக, அகில இலங்கை சிற்றுண்டக உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 44 ரூபாவாக இருந்த வெள்ளை முட்டை ஒன்றின் விலை 8 ரூபாவாலும், 46 ரூபாவாக இருந்த சிவப்பு அல்லது பழுப்பு நிற முட்டை ஒன்றின் விலை, 9 ரூபாவாலும் அதிகரித்துள்ளதாக அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் முதல் அமுலாகும் வகையில், முட்டை கிலோ ஒன்றுக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து, நுகர்வோர் விவகார அதிகார சபை சட்டத்தின் கீழ், அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

இதற்கமைய, ஒரு கிலோகிராம் வெள்ளை நிற முட்டை 880 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் சிவப்பு அல்லது பழுப்பு நிற முட்டை 920 ரூபாவாகவும், அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், வெள்ளை முட்டை ஒன்று 44 ரூபாவுக்கும், சிவப்பு பழுப்பு நிற முட்டை ஒன்று 46 ரூபாவுக்கும், அதிகபட்ச சில்லறை விலையாக விற்பனை செய்யப்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிர்ணய விலையை விடவும், அதிக விலைக்கு முட்டையை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக, நுகர்வோர் விவகார அதிகார சபை சட்டத்தின் அடிப்படையில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என குறித்த விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க, முட்டை நிறை குறித்து தங்களுடன் எந்தவித பேச்சுவார்த்தையும் நடத்தப்படவில்லை என குறிப்பிட்டார்.

முட்டையை, நிறைக்கேற்ற வாறு விற்பனை செய்யும் நோக்கில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் பயன் இல்லை.

குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியாகும் வரை அது தொடர்பில் முட்டை உற்பத்தியாளர்கள் அறிந்திருக்கவில்லை என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்தார். (அ)

இம்ரான் குரேஷி

# கர்நாடக காங்கிரஸில் முதலமைச்சர் வேட்பாளரை தேர்வு செய்வதில் என்ன குழப்பம்?

கர்நாடக காங்கிரஸில் இருக்கும் முக்கிய பிரச்சனை தொடர்பாக அம்மாநில தலைவர்களை வைத்துக் கொண்டே காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, தீர்க்கமான பதிலை அளித்துள்ளார்.

மே 10ஆம் திகதி நடைபெறும் கர்நாடக சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸ் வெற்றிபெற்றால் யார் முதலமைச்சர் என்பது குறித்து கர்நாடாகாவில் உள்ள தலைவர்கள் யாரும் கவலைப்பட வேண்டாம், அதற்கு பதிலாக 150-160 இடங்களில் வெற்றி பெறுவது எப்படி என்பதில் கவனம் செலுத்துங்கள் என்று அவர் கூறியுள்ளார்.

கர்நாடக காங்கிரஸில் தற்போது முதலமைச்சர் கனவில் உள்ள முன்னாள் முதலமைச்சர் சித்தராமையா, மாநில தலைவர் டி.கே. சிவக்குமார் ஆகியோர் மற்றும் முன்னாள் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி ஆகியோர் முன்னிலையில் இந்த மழுப்பலான கருத்தை மல்லிகார்ஜுன கார்கே வெளிப்படுத்தினார்.

ராகுல் காந்தி தனது எம்.பி. பதவியை இழப்பதற்கு காரணமான மோடி பெயர் குறித்த கருத்துகளை உதிர்த்த அதே கோலார் பகுதியில் நடைபெற்ற கூட்டத்தில்தான் மல்லிகார்ஜுன கார்கே, இந்த கருத்துகளை தெரிவித்துள்ளார்.

"உங்கள் அனைவருக்கும் இதை நான் தெளிவாக குறிப்பிட விரும்புகிறேன். யார் முதலமைச்சர் என்பது குறித்து நான் கவலைப்படவில்லை. காங்கிரஸ் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும், இந்திரா உணவகம், மாணவர்களுக்கு இலவச பாடப் புத்தகங்கள் மற்றும் பிற திட்டங்களை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்பது மட்டுமே என் முக்கிய கவலையாக உள்ளது. எம்.எல்.ஏ.க்கள், மேலிடம் ஆகியோரின் எண்ணப்படி முதலமைச்சர் தேர்வு செய்யப்படுவார். நீங்கள் மக்களை பற்றி நினைத்துப்பாருங்கள், அனைவரும் இணைந்து பணியாற்றுங்கள், மற்றவற்றை யெல்லாம் எங்களிடம் விட்டுவிடுங்கள்" என்று கார்கே கூட்டத்தில் பேசினார்.

கர்நாடாவில் உள்ள தலைமைப் பூசல் குறித்து கார்கே, அதுவும் பொதுவெளியில் பேசுவது இதுவே முதல் முறை. 1962 ஆம் ஆண்டு அன்றைய அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் நீலம் சஞ்சீவ ரெட்டியை (இந்தியாவின் 6-ஆவது குடியரசுத் தலைவராக இருந்தவர்) போலல்லாமல், தாம் முதலமைச்சர் பதவிக்கு போட்டியிடவில்லை என்று அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் கூறியதும் இதுவே முதல் முறை.

தன்னை விட பல ஆண்டுகள் மூத்தவரான கார்கேவின் கீழ் வேலை செய்வதை தான் மிகவும் விரும்புகிறேன் என்று கடந்த வாரம் ஊடக சந்திப்பு ஒன்றில் குறிப்பிட்ட சிவக்குமாருக்கான பதிலாகவும் கார்கேவின் பேச்சு அமைந்துள்ளது.

அந்த சந்திப்பின்போது, கார்கேவிற்கு முதலமைச்சர் பதவியை விட்டுக்கொடுக்க நீங்கள் தயாராக இருக்கிறீர்களா என்று சிவக்குமாரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர், "அவர் என்னுடைய தலைவர் மட்டுமல்ல அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவரும்கூட. அவருக்கு கீழ் வேலை செய்வதை நான் விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்துக்கும், நாட்டுக்கும் அவர் முக்கிய சொத்து. கட்சியின் முடிவுக்கு நான் கட்டுப்படுவேன். அவர் என்னைவிட 20 ஆண்டுகள் அனுபவம் வாய்ந்தவர். நான் சட்டப்பேரவைக்குள் 1985ல்




நுழைந்தேன், அவர் 1972லேயே வந்துவிட்டார்" என்று தெரிவித்தார்.

மேலும் பேசிய சிவக்குமார், "காங்கிரஸ் சட்டமன்றக் குழு தலைவர் பதவியை நள்ளிரவில் ராஜினாமா செய்தவர் கார்கே (தேசிய அரசியலில் ஈடுபடுவதற்காக கட்சி மேலிடம் கேட்டுகொண்டதற்காக பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து, காங்கிரஸ் சட்டமன்றக் குழு தலைவர் பதவியை சித்தராமையா 2009ல் ஏற்றார்.) கட்சியில் பின்னர் படிப்படியாக உயர்ந்து தற்போது அகில இந்திய தலைவராக உயர்ந்துள்ளார், இது வேறு எந்த கட்சியிலும் சாத்தியமில்லாதது. அவர் அகில இந்திய தலைவரான பின்னர் கர்நாடக காங்கிரஸுக்கு புத்துணர்ச்சி கிடைத்தது. எனவே, அவருடைய விருப்பத்கு எதிராக நான் செயல்பட மாட்டேன்" என்றும் குறிப்பிட்டார்.

தலைமை தொடர்பான எம்.எல்.ஏ.க்கள் என்ன சொல்கிறார்களோ அதனை கட்சி தலைமை ஏற்றுக்கொள்ளும் என்று பொது வெளியில் சித்தராமையா கூறிய சில நாட்களிலேயே சிவக்குமார் தனது கருத்துகளை கூறியிருந்தார்.

முதலமைச்சராகும் வாய்ப்பை கார்கே மூன்று முறை தவறவிட்டுள்ளார். முதன் முதலாக, 1999-ம் ஆண்டு எஸ்.எம். கிருஷ்ணாவை கட்சி மேலிடம் முதலமைச்சராக நியமித்தது. 2004இல், காங்கிரஸ்-மதசார்பற்ற ஜனதா தளம் கூட்டணியை தரம் சிங் வழிநடத்த, தேவகவுடா விரும்பியதால் 2-ஆவது முறையாக முதலமைச்சர் வாய்ப்பை கார்கே இழந்தார். மூன்றாவது முறை 2013ல், சித்தராமையா எம்.எல்.ஏ.க்களுடன் சேர்ந்து லாபி செய்து முதலமைச்சர் பதவியை பெற்றதால் தவறவிட்டார்.

**காங்கிரஸ் கட்சியை தோற்கடிக்க காங்கிரஸ்காரர்களால் மட்டுமே முடியும்**

முதலமைச்சர் பதவி தொடர்பான போட்டி கர்நாடக காங்கிரஸ் கட்சியில் கடந்த சில ஆண்டுகளாக நடந்து வருகிறது. அப்போது முதல், சித்தராமையா மற்றும் சிவக்குமார் ஆகியோரின் ஆதரவாளர்கள் பொதுவெளியிலும், கட்சிக்குள்ளும் இது குறித்து பேசி வருகின்றனர். இந்த போக்கு காங்கிரஸ் கட்சிக்கு கடும் தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. சித்தராமையா போட்டியிடுவதற்காக எம்.எல்.ஏ. ஒருவர் பெங்களூரு நகரில் தனது தொகுதியை விட்டுக்கொடுக்கவும் முன்வந்தார்.

சில எம்.எல்.ஏ.க்களுக்கு அகில இந்திய காங்கிரஸ் பிரதிநிதிகள், கட்சி தலைமை கடிவாளம் போட்டது. பொதுவெளியில் இந்த விவகாரம் தொடர்பாக கருத்து தெரிவிக்க வேண்டாம் என்றும் பாஜகவுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுத்துவிட வேண்டாம் என்றும் அவர்களிடம் அறிவுறுத்தப்பட்டது. ஒரு காலத்தில் கார்கேவின் பெயர் கூட முதலமைச்சர் பதவி தொடர்பான பேச்சில் இடம்பெற்றது. சித்தராமையா, சிவக்குமார் ஆகியோரின் ஆதரவாளர்கள் இடையே நடந்த அறிக்கைப் போர் 2012இல் தாவணகேரேயில் நடந்த கட்சித் தலைவர்கள் மாநாட்டில் ராகுல் காந்தி பேசிய புகழ்பெற்ற வாசகத்தை காங்கிரஸ் தொண்டர்கள் மீண்டும் நினைவுபடுத்தி பார்க்கும் நிலையை ஏற்படுத்தியது.




அந்த கூட்டத்தில், "கர்நாடாகாவில் காங்கிரஸ் கட்சியைச் யாராலும் தோற்கடிக்க முடியாது. காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைப்பதை தடுக்க காங்கிரஸ் கட்சியால் மட்டுமே முடியும்" என்று ராகுல் காந்தி பேசியிருந்தார்.

கோலாரில் நடைபெற்ற கூட்டத்தில் கார்கே பேசும்போது, "உங்களை கைகூப்பி கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து ஒற்றுமையாக இருங்கள். நான் இலக்கு நிர்ணயித்த இடங்களை வெல்வது என்பது முடியாத காரியமல்ல. கடந்த காலங்களில் 130 மற்றும் அதற்கு அதிகமான இடங்களை நாம் வென்றுள்ளோம்." என்றும் அவர் தெரிவித்திருந்தார். (1989 தேர்தலில் 177 தொகுதிகளில் வெற்றிபெற்றதே காங்கிரஸின் அதிகபட்சம் ஆகும்)

மே 10ஆம் தேதி நடைபெறும் கர்நாடக சட்டப்பேரவை தேர்தலுக்கு பாஜக சார்பில் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்று அறிவிக்கப்படவில்லை என்றாலும் பாஜக வெற்றி பெற்றாலும் தற்போதைய முதலமைச்சராக உள்ள பசவராஜ் பொம்மைதான் மீண்டும் முதலமைச்சராக வாய்ப்பு உள்ளதாக கருதப்படுகிறது.

இந்த தேர்தலில் காங்கிரஸ் சார்பிலும் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்று அறிவிக்கப்படவில்லை. சித்தராமையாவும் சிவக்குமாரும் மாநிலம் முழுவதும் முதல் சுற்று பிரசாரத்தை இணைந்து முடித்துள்ளனர். வேட்புமனுத் தாக்கல் முடிந்த பின்னர் அவர்கள் பிரசாரம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. கர்நாடாவின் வடக்கு, மத்திய மற்றும் கடலோர பகுதிகளில் சித்தராமையா பிரசாரம் மேற்கொள்ளவுள்ள நிலையில், மாநில காங்கிரஸ் தலைவர் சிவக்குமார், அவர் பிறந்த சமூகமான வொக்கலிகா மக்கள் அதிகமுள்ள தென் மாவட்டங்களில் கவனம் செலுத்தவுள்ளார்.

நம்மிடம் பேசிய கட்சி நிர்வாகி ஒருவர், 224 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் தேர்வில் சித்தராமையா, சிவக்குமார் ஆகிய இருவரும் தங்களது பரிந்துரைகளை தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டார். ஆனால், பெரும்பான்மையான இடங்கள் குறித்து உடன்பாடு எட்டப்பட்டுள்ளதை அகில இந்திய தலைமை உறுதிப்படுத்தியுள்ளது.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ரன்தீப் சிங் சுர்ஜிவாலாவை கர்நாடக தேர்தலுக்கான பொறுப்பாளராக கட்சி நியமித்துள்ளது. கட்சி நடவடிக்கையாக உன்னிப்பாக கவனிப்பது, கட்சி மற்றும் அதன் தலைவர்கள் சுமூகமாக செயல்படுவதை உறுதி செய்வது போன்றவற்றை அவர் கவனிப்பார்.

**கர்நாடக முதலமைச்சராக கார்கே தேர்வு செய்யப்படக் கூடுமா?**

கார்கேவின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக அரசியல் விமர்சகர்கள் பல்வேறு காரணங்களை சுட்டிக்காட்டுகின்றனர்.

"முதலமைச்சர் பதவியை கைப்பற்ற வேண்டும் என்ற லட்சியம் ஒருகாலத்தில் அவருக்கு இருந்தது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் தற்போது அகில இந்திய காங்கிரஸ் தலைவராக அவர் முதலமைச்சர் பதவிக்கும் மேலே உயர்ந்துள்ளார். எனவே, அவர் அதைவிட்டு கிழே இறங்க மாட்டார். அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் குலாம் நபி ஆசாத்தையும், முன்னாள் காங்கிரஸ் உறுப்பினர் கபில் சிபலையும் சந்திக்க கார்கே காத்திருக்கும் காலம் இருந்தது. இன்று, அவரைச் சந்திக்க பலர் காத்திருக்கின்றனர்," என அரசியல் விமர்சகர் டி. உமாபதி தெரிவித்தார்.

அதே நேரத்தில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக ஆனதை உதாரணம் காட்டி, அவ்வாறு செய்வதில் எந்தத் தவறும் இல்லை என்பதை சுட்டிக்காட்டுகிறார். நீலம் சஞ்சீவ ரெட்டி, 1960 முதல் ஒருங்கிணைந்த ஆந்திரப் பிரதேசத்தின் முதலமைச்சராகப் பதவி வகித்தார். பின்னர் அவர் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக ஆனார், 1962 வரை அந்தப் பதவியில் நீலம் சஞ்சீவ ரெட்டி இருந்தார்.

அதன் பின்னர், மீண்டும் 1962 முதல் 1964 வரை முதலமைச்சராக பதவி வகித்தார். அதன் பின்னர், மத்திய அமைச்சரவையில் இணைந்து மக்களவையின் சபாநாயகராக பதவி வகித்த அவர், பின்னர் இந்திய குடியரசுத் தலைவராகவும் உயர்ந்தார். ●

நிலாந்தன்

# சிலைகள் சிலைகள் – “எங்களுடைய எதிரி எங்களுடைய ஆசிரியர் அல்ல”

**1980**களில் முதலாம் கட்ட ஈழப் போரின்போது இயக்கங்கள் மத்தி யிலும் பொதுமக்கள் மத்தியிலும் அதிகம் பார்க்கப்பட்ட ஒரு படம் உமர் முக்தாரின் போராட்ட வாழ்க்கை பற்றிய ஒரு திரைப்படமாகும். இப்படத்தில் ஓரிடத்தில் உமர் முக்தாரிடம் அவருடைய போராளிகள் வந்து கேட்பார்கள் கைது செய்யப்பட்ட எதிரிப் படைகளை நாங்கள் சித்திரவதை செய்து கொல்வோமா? என்று. உமர் முக்தார் ஏன் அப்படிச் செய்ய வேண்டும் என்று கேட்பார்.

அவர்கள் எங்களுடைய போராளிகளை கைது செய்யும் பொழுதும் அப்படித்தான் கொன்றார்கள். எனவே நாங்களும் அவர்களுக்கு அவர்களுடைய பாணியிலேயே பதில் கொடுக்க வேண்டும் என்று போராளிகள் கூறுவார்கள். அப்பொழுது உமர் முக்தார் மிக நிதானமாக ஒரு பதில் சொல்வார் “எங்களுடைய எதிரி எங்களுடைய ஆசிரியர் அல்ல” என்று.

இது ஒரு முக்கியமான பதில். போராடும் இனங்கள், போராட்டத்திற்காகவே ஒரு தலைமுறையை இழந்த இனங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு பாடம். எங்களுடைய எதிரி எங்களுடைய ஆசிரியர் அல்ல.

அண்மை மாதங்களாக ஏன் அண்மை ஆண்டுகளாக என்று கூடச் செல்லலாம், வடக்கில் நடப்பவற்றை பார்க்கும்போது உமர் முக்தாரின் மேற்படி வாசகம் மீண்டும் மீண்டும் நினைவுக்கு வருகிறது. கடந்த கிழமை மட்டும் யாழ்ப்பாணத்தில் இரண்டு சிலைகள் திறக்கப்பட்டன. ஒன்று பண்ணை வாசலில் நயினா தீவு நாகம்மாளுக்கு ஒரு சிலை. கீரிமலையில் ஆறுமுக நாவலருக்கு ஒரு சிலை. இதற்கு முந்தைய வாரங்களிலும் அவ்வாறு பல சிலைகள் திறக்கப்பட்டன. அவற்றுள் திருவள்ளுவர் உட்பட சமயப் பெரியார்கள் மற்றும் மன்னர்கள் கடவுளர்களின் சிலைகள் அடங்கும்.

சிலைகளை எழுப்புவது எல்லா சமூகங்களிலும் உண்டு. சிலைகள் தேவை. சமூக உருவாக்கிகளையும் பேராளுமைகளையும் பொதுவெளியில் சிலைகளாக நிறுத்துவது ஒரு நல்ல முன்னுதாரணம். அது அடுத்தடுத்த தலைமுறைக்கு எப்படி ஒரு வாழ்க்கையை வாழ வேண்டும் என்ற முன்னுதாரணத்தைக் கொடுக்கும். ஒரு வெளிப் பார்வையாளருக்கு அந்த சமூகத்தின் முன்னோடிகள் யார் என்பதை அறிந்து கொள்ள அது உதவும். அதைவிட முக்கியமாக ஒரு சமூகம் அதன் பொது வெளியில் எப்படிப்பட்ட சிற்பங்களை, சிலைகளை நிறுவுகிறது? அவற்றின் கலைப்பெறுமதி எத்தகையது? போன்ற அனைத்தும் ஒரு வெளிப் பார்வையாளருக்கு அந்த சமூகத்தை மதிப்பிட உதவும். அந்த சமூகத்தின் விழுமியங்கள், அந்த சமூகத்தின் கலை உச்சங்கள், கலைப் பாரம பரியம் போன்ற எல்லாவற்றையும் அறிந்து கொள்ள அது உதவும். இந்த அடிப்படையில் கூறின் சிலைகள் தேவை.

ஆனால் நாட்டில் தற்பொழுது நிறுவப்படும் பெரும்பாலான சிலைகள் மேற்சொன்ன வகைக்குள் மட்டும் வருபவை அல்ல. சில சமயப் பெரியார்கள் சமூகப் பெரியார்களின் சிலைகளைத்தவிர, ஒரு பகுதி கடவுள் சிலைகள் மேற்கண்ட நோக்கத்தின் அடிப்படையில் நிறுவப்படவில்லை. அவை கடந்த பல மாதங்களாக தமிழ் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் போட்டிக்குச் சிலை எழுப்பும் ஒரு போக்கின் விளைவுகளே.



சிலைகளை அரசியல் உள்நோக்கத்தோடு முதலில் நிறுவியது சிங்கள பௌத்த அரசியல்தான். முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறியது போல, புத்தர் சிலைகளை எல்லைக் கற்களாக வைத்தது சிங்களபௌத்த அரசியல்தான். அதுபோலவே மன்னாரில் கத்தோலிக்கர்கள் தங்களுடைய முதன்மையை நிலைநாட்டுவதற்கு ஆங்காங்கே சிலைகளை வைப்பதுண்டு என்று மன்னாரில் உள்ள இந்துக்கள் குற்றம் சாட்டுவதுண்டு.

ஒரு கடவுள் சுருவத்தை யார் வைத்தது என்று தெரியாமல் இரவோடு இரவாக அனாமதேயமாக முதலில் வைத்து விட்டால், அதைப் பின்னர் அகற்றுவது கடினம். ஏனென்றால் அது மக்களுடைய நம்பிக்கைகளோடு தொடர்புடையது. வைத்த சிலையை அகற்றுவது சமயங்களுக்கு இடையே, சமூகங்களுக்கு இடையே முரண்பாடுகளை ஏற்படுத்தும். அதை அனாமதேயமாக அகற்றலாம். அல்லது உடைக்கலாம். அதுவும் முரண்பாடுகளை ஏற்படுத்தும். எனவே ஒரு சிலையை வைத்தால் வைத்ததுதான். படிப்படியாக அதற்கு ஒரு பீடம் வைக்கப்படும். பின் கூரை வைக்கப்படும். அதன் பின் சில சமயம் பூஜைகளும் நடத்தப்படும். இத்தனைக்கும் அவை பொதுவெளிச் சிலைகள். கற்பகக் கிரகங்களுக்குள் இருக்கும் மூலவிக்கிரகங்கள் அல்ல. இந்துமத நம்பிக்கைகளின்படி அவை ஆவாகனப்படுத்தப்பட்ட சிலைகள் அல்ல. அவை பொதுவெளிச் சிற்பங்கள். அவை வழிபாட்டுக்குரியவை அல்ல. ஆனால் நாட்டில் வழிபாட்டுருக்களுக்கும் பொது வெளிச் சிற்பங்களுக்கும் இடையே வேறுபாடு தெரியாத ஒரு நிலைமை வளர்ந்து வருகிறது.

சிங்கள பௌத்த அரசியல்தான் முதலில் சிலைகளை வைக்கத் தொடங்கியது. அங்கே மதப் பல்வகைமைக்கு எதிரான மத மேலாண்மை என்ற உள்நோக்கம் இருந்தது. சிங்கள பௌத்தர்கள் இல்லாத இடங்களில் வைக்கப்பட்ட எல்லாச் சிலைகளுமே மத மேலாண்மையின் குறியீடுகள்தான். தமிழ்ப் பகுதிகளை பிடித்து வைத்திருக்கும் படையினர் தமது வழிபாட்டுத் தேவைகளுக்காக உருவாக்கும் சிலைகளும் அத்தகையவைதான். அவை ஆக்கிரமிப்புச் சின்னங்களாகத்தான் தமிழ் மக்களால் பார்க்கப்படுகின்றன. இவ்வாறு புத்தர் சிலைகளை ஆக்கிரமிப்பின் குறியீடுகளாக மாற்றியது சிங்கள பௌத்த அரசியல்தான்.

அதற்கு மறுப்பாக இப்பொழுது இந்துக்களும் சிலைகளை வைக்கத் தொடங்கியிருக்கிறார்கள். தமிழ்ப் பகுதிகளில் வேகமாக வளர்ந்து வரும் ஒரு போக்கு இது. முதலில் ஒரு சிவலிங்கம் யார் வைத்தது என்று தெரியாமல் அனாமதேயமாக இரவோடு இரவாக வைக்கப்படும். பின்னர் அதனை அலங்கரிக்கும் வேலைகளும் பாதுகாக்கும் வேலைகளும் படிப்படியாகச் செய்யப்படும். அப்படி ஒரு பெரிய சிவலிங்கம் சில ஆண்டுகளுக்கு முன்பு செம்மணிச் சந்தியில் வைக்கப்பட்டது. கண்டிவீதியில் யாழ்ப்பாணம் வரவேற்கின்றது என்று காணப்படும் வளைவுக்கு அருகே அது வைக்கப்பட்டது. தற்காலிகமாக மண்குவியல் ஒன்றை ஏற்படுத்தி அதன் மீது அது வைக்கப்பட்டது. வைக்கப்பட்ட புதிதில் அது நேராக நீர்மட்டம் பார்த்து வைக்கப்படவில்லை. எனவே அந்தச் சிவலிங்கம் ஒரு பக்கம் சாய்ந்து நின்றது. ஆனால் இப்பொழுது அதற்கு ஒரு கட்டிடம் கிடைத்துவிட்டது. அதை இனி அங்கிருந்து அகற்ற முடியாது. அதை அகற்றினால் அது யாழ்ப்பாணத்தில் உள்ள இந்துக்களின் மனங்களை காயப்படுத்தக்கூடும்.

சில வாரங்களுக்கு முன் வடமராட்சி கிழக்கிலும் அவ்வாறு ஒரு சிவலிங்கம் வைக்கப்பட்டது. அதற்கும் இனிமேல் உரிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்று நம்பலாம். சில நாட்களுக்கு முன் பண்ணையில் நயினாதீவு அம்மனின் சிலை வைக்கப்பட்டது. இந்தச் சிலைகளை வைப்பது உருத்திர சேனை என்று நம்பப்படுகிறது. சிவசேனையைப் போல உருத்திரசேனையும் அண்மை மாதங்களாகத் துடிப்பாகச் செயல்பட்டு வருகிறது. ஒரு புறம் சிலை வைப்பது இன்னொருபுறம் மதம்மாற்றும் ஆவிக்குரிய சபைகளுக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுப்பது.

ஒரு மதப் பிரிவினர் அதிகம் வாழும் இடங்களில் பொதுவெளியில் அவ்வாறு சிலைகளை நிறுவுவது என்பது நம்பிக்கைகள் சார்ந்த ஒரு விடயம். ஆனால் இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்டதுபோல சிங்கள பௌத்த அரசியலுக்கு எதிரான ஒரு மறுத்தானாக அதை வியாக்கியானப்படுத்தும் போதுதான் சில கேள்விகள் எழுகின்றன.

ஆக்கிரமிப்புக்கு எதிராக ஒரு மக்கள் கூட்டம் தற்காப்பாக சிலைகளை நிறுவுவதற்கு ஒரு நியாயம் உண்டு. மரபுரிமை ஆக்கிரமிப்புக்கு எதிராக தமது மரபுரிமைச் சின்னங்களை முன்னிறுத்த ஒரு மக்கள் கூட்டத்திற்கு உரிமை உண்டு. ஆனால் அவ்வாறு சிலைகளை நிறுவும் பொழுது பின்வரும் விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

முதலாவதாக, அனாமதேயமாக சிலைகளை வைப்பது என்பது சிங்கள பௌத்தர்கள் கடைப்பிடிக்கும் ஒரு நடைமுறை. நிச்சயமாக அவை தான்தோன்றி லிங்கங்கள் அல்ல. உண்மையான தான்தோன்றிச் சுருவங்களுக்கு மக்கள் மத்தியில் ஒரு புனிதப்பெறுமதி உண்டு. உமர் முக்தார் கூறியதுபோல சிங்கள பௌத்தத்தின் ஆக்கிரமிப்பு நிகழ்ச்சி திட்டத்தை அப்படியே சைவர்களும் கடைப்பிடிக்க தேவையில்லை.

இரண்டாவதாக, வைக்கப்படும் சிலைகள் தொடக்கத்தில் யாராலும் கவனிக்கப்படாது அனாதைகளாகக் காணப்படும். அக்காலகட்டத்தில் அவற்றை பறவைகள் எச்சமிட்டு அசிங்கப்படுத்தும். அந்த சிலையை அல்லது சிவலிங்கத்தை அப்பகுதி மக்கள் பொறுப்பேற்கும்வரை அவை கவனிப்பாரற்றுக் கிடக்கும். இது குறிப்பிட்ட சிலையை வைத்தவர்களின் மத நம்பிக்கைகளை கேள்விக்கு உள்ளாக்கக் கூடியது. தனது இஷ்ட தேவதையின் சிற்பத்தை இவ்வாறு அனாதையாக விட்டுச் செல்லும் எவரும் அந்த இஷ்ட தேவதையை அவமதிக்கிறார்கள் என்றுதானே பொருள்? இது இரண்டாவது விடயம்.

மூன்றாவது விடயம், அச்சிலைகளின் கலையம்சம் தொடர்பானது. இது குறித்து நான் ஏற்கனவே எழுதியுள்ளேன். இந்த விடயத்தில் துறை சார்ந்த நிபுணர்களான சிற்பிகளை அணுகி சிலைகளை வடிவமைக்க வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சி சிலைகளை வைப்பவர்களிடம் உண்டா? என்ற கேள்வி இங்கு முக்கியமானது.

நாலாவது விடயம், சிலைகளை வைக்க வேண்டும். அதைவிட முக்கியமாக ஒரு மரபுரிமை ஆக்கிரமிப்புக்கு எதிராக அல்லது மத மேலாண்மைக்கு எதிராக தன்னுடைய நம்பிக்கைகளை முன்னிறுத்தும் ஒரு சமூகம் எப்படிப்பட்ட தற்காப்பு நடவடிக்கைகளை முதலில் செய்ய வேண்டும்?

மரபுரிமை சொத்துக்களை பேணுவது என்பது ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டுரிமையாகும். அதாவது அரசியல் உரிமை. தமிழ் மக்களுக்கு அந்த உரிமை கிடையாது. ஆனாலும் தமது மரபுரிமைகளை பாதுகாப்பதற்குரிய தற்காப்பு நடவடிக்கைகளை தமிழ்மக்கள் அதற்குரிய அரசியல் மற்றும் அழகியல் அர்த்தத்தில் திட்டமிட வேண்டும். அதில் இருக்கவேண்டிய அழகியல், நவீனத்துவம் போன்றவற்றில் கவனம் செலுத்தவேண்டும். இது தொடர்பாக உலகளாவிய அனுபவங்களை கற்றுக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசற்ற தரப்பாகிய தமிழ் மக்கள் மரபுரிமை ஆக்கிரமிப்புக்கு எதிராக எப்படிப்பட்ட தற்காப்புக் கவசங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பது சில மத நிறுவனங்கள் மட்டும் தீர்மானிக்கும் விடயம் அல்ல. அது ஒரு அரசியல் சமூக பொருளாதார கலாச்சார நடவடிக்கை. அது ஒரு கூட்டு நடவடிக்கை. அதைக் கூட்டாகத் திட்டமிட வேண்டும். உலகத் தரத்துக்குத் திட்டமிட வேண்டும். நவீனமாகத் திட்டமிட வேண்டும். ஒரு ஆக்கிரமிப்பு அரசியலுக்கு எதிராக அந்த ஆக்கிரமிப்பு அரசியலின் பாணியிலேயே பதில் சொல்வது வேண்டுமானால் போர் விதிகளுக்குப் பொருத்தமாக இருக்கலாம். நிச்சயமாக மரபுரிமைக் களத்துக்கு அது பொருத்தம் இல்லை.

# கிழக்கு ஊடகவியலாளர்களை கௌரவித்து இப்தார் விருந்து!



நிந்தவூர், ஏப். 22

சாய்ந்தமருதைச் சேர்ந்த பிரபல ஜவுளி மற்றும் வர்த்தக நிறுவனம் ஒன்று அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்களை கௌரவித்து தனியாக நோன்பு திறக்கும் இன ஐக்கிய இப்தார் நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்து நடத்தியது.

கிழக்கிலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் இயங்கும் முபாறக் ரெக்ஸ் நிறுவனத்தின் தலைவர் அல்-ஹாஜ் எம்.எஸ்.எம். முபாறக்கின் எண்ணக்கருவுக்கு அமைய, ஊடகவியலாளர்களைக் கௌரவித்து மேற்படி இப்தார் நிகழ்வு நடைபெற்றது.

சாய்ந்தமருது சீபிறிஜ் வரவேற்பு மண்டபத்தில் அல் ஹாஜ் முபாறக் தலைமையில் நடை பெற்ற இந்த இப்தார் நிகழ்வில், 30இற்கும் மேற் பட்ட தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் மௌலவி. ஏ.பி.எம். சிம்லி (நஹ்லி), அஷ்ஷெய்க் றஷீட் மௌலவி ஆகியோர்கள் சன்மார்க்க செற்பொழிவும், விஷேட துஆ பிரார்த்தனையும் நடத்தினர்.

மேலும் தமது வர்த்தக நிறுவனம் ஆரம்பித்த காலம் முதல் ஊடகங்கள் அளித்த ஆதரவே தமது நிறுவனம் அபரிமித வளர்ச்சி காணக் காரணமென நன்றிப் பெருக்குடன் உரையாற்றிய அல்-ஹாஜ் முபாறக், மறைந்த ஒலிபரப்பாளர் மர்ஹூம் ஏ.ஆர்.எம். ஜிப்ரி மற்றும் பிறை எப்.எம் பணிப்பாளர் பஷீர் அப்துல் கையூம் ஆகியோருக்கு நோன்பு பெருநாளுக்காக காசோலைகளை வழங்கியதுடன், நிகழ்வில் கலந்து கொண்ட சகல தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கும் தமது முபாறக் இமேஜ் சார்பில் புத்தாடைகள் கொண்ட பெருநாள் பொதிகளையும் வழங்கினார்.

(ஐ-06)

# நிந்தவூர் பள்ளிவாசல்களின் முஅத்தின்களுக்கு கௌரவம்



நிந்தவூர், ஏப். 22

நிந்தவூரிலுள்ள பள்ளிவாசல்களில் கடமை புரியும் சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட முஅத்தின்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வின் போது இளம் சமுக சேவை செயல்பாட்டாளரும் பிர்தௌஸ் ஜூம்ஆ பள்ளிவாசலின் பிரதம இமாமுமாகிய அல் ஹாபிழ் மௌலவி. ஏ .பி. எம். ஷிம்லி (நஹ்லி) நெறிப்படுத்தலில் நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ. எம். நஜீபின் சொந்த குடும்ப நிதியிலிருந்து சுமார் ஒன்றரை இலட்சம் ரூபாய்க்கு மேலான பெறுமதியுடைய பெருநாள் பொதிகள் (சேர்ட், சாரம்) அடங்கிய பொதிகள் முஅத்தின்மார்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்த வைபவம் சிவில் சமுக செயல்பாட்டாளரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான ஏ. எம். றஸீன் தலைமையில் நிந்தவூர் ஜூம்ஆ பள்ளிவாசல் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் நிந்தவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ. எம். நஜீப், கல்முனைப் பிராந்தியத்தின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரி. எச் .டி. எம். எல். புத்திக்க, நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ. எம். அப்துல் லத்தீப், நிந்தவூர் ஜூம்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் அல்ஹாஜ். எஸ்.எம்.பி.இப்றாகிம், பொலிஸ் பொறுப்பதிகாரியின் புதல்வர் அவாசிக் அஹமட் நஜீப், பிரதேச சபை நிருவாக உத்தியோகத்தர் சரீம், மௌலவி. அல்ஹாபிழ் ஏ.எம். ஷிம்லி ஆகியோர் கலந்து கொண்டனர்.

புனித நோன்பு காலத்தில் சிறப்பான பணியை வழங்கி உதவிய நிந்தவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நஜீப் அவர்களுக்கு நிந்தவூர் பொது மக்கள் பெரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

(ஐ-06)

# ஆள்மாறாட்டம் செய்தவர் அகப்பட்டுக்கொண்டார்!

கொழும்பு, ஏப். 22

பொது பாதுகாப்பு அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளராக ஆள்மாறாட்டம் செய்த ஒருவர் சிலாபத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் 18ஆம் திகதி அமைச்சு அதிகாரி ஒருவரை தொலைபேசியில் அச்சுறுத்திய சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர் கடந்த புதன்கிழமை சிலாபம் கொட்டாரமுல்லையில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இஹல கொட்டாரமுல்லை படுவத்தை வீதியைச் சேர்ந்த 37 வயதுடைய வர்ணகுலசூரிய நிலங்க மனோஜ் பெர்னாண்டோ என்பவரே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கு முன்னரும் அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளராக ஆள்மாறாட்டம் செய்து சில பொலிஸ் அதிகாரிகளுக்கு அவர் அச்சுறுத்தல் விடுத்ததாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கடுவெல நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட அவர் ஒரு லட்சம் ரூபாய் சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (அ)






# இயற்கை விவசாய உற்பத்திகளுக்காக திருமலையில் தரம்வாய்ந்த ஆய்வுகூடம்

## சீன நாட்டுப் பிரதிநிதிகள் முழு ஒத்துழைப்பு

திருமலை, ஏப். 22

**திருகோணமலை - கந்தளாய் பிதேசத்தில் இயற்கை விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான தரம் வாய்ந்த ஆய்வு கூடம் அமைப்பது தொடர்பாக சீனாவின் யுனான் மாகாண பிரதிநிதிகள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கத் தீர்மானித்துள்ளனர்.**

யுனான் மாகாணத்தின் வெளிநாட்டு உறவுகள் அலுவலகத்தின் பிரதிப் பணிப்பாளார் நாயகத்துக்கும், கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்திற்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேதன உற்பத்திப் பொருட்களின் தரத்தை ஆய்வு செய்து விதை ஆராய்ச்சிக்கு சர்தேச தரச் சான்றிதழ் வழங்குவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் இவ்வாறான சர்வதேச தரச் சான்றிழை வழங்கும் ஆய்வுகூடம் ஒன்று கட்டப்படுவது இதுவே முதற் தடவை ஆகும்.

யுனான் மாகாணத்தின் ஆளுநர் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கு இடையில் இது தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதுடன் எதிர்வரும் மே மாத்தில் இதனை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.



உடன்படிக்கையின் பிரகாரம் ஆய்வுகூடத்தின் பணிகள் 02 கட்டங்களாக மேற்கொள்ளப்படவுள்ளதுடன் முதற்கட்டமாக மண், விதை, நீர் மற்றும் உரம் என்பன பரிசோதிக்கப்படும். இரண்டாவது கட்டமாக சர்வதேச தரச் சான்றிதழைப் பெறுவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

யுனான் மாநிலத்திலிருந்து அதிகளவான முதலீட்டாளர்ளை கிழக்கு மாகாணத்திற்கு முதலீட்டுக்காக உள்ளீர்ப்பதே இதன் பிரதான நோக்கமாகும் என தெரிவிக்கப்பட்டது. (அ)

# விசேட தேவையுடைய 2 சிறுமிகளை கை, கால் கட்டிவைத்து சித்திரவதை

## மட்டக்களப்பில் விசாரணை ஆரம்பம்

மட்டக்களப்பு, ஏப். 22

மட்டக்களப்பில் விசேட தேவையுடைய இரு சிறுமிகளை கட்டிவைத்து சித்திரவதை செய்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் மற்றும் மனித உரிமை ஆணைக் குழுவினர் குறித்த பராமரிப்பு நிலையத்துக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை சென்று விசாரணைகள் மேற்கொண்டதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான பராமரிப்பு நிலையத்தில் 22 பெண்கள், 4 ஆண்கள் உட்பட 26 சிறுவர்கள் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் அண்மையில் அங்குள்ள ஒரு சிறுமி இரு கைகளை பின்பக்கமாவும் இரு கால்களை கயிற்றினாலும் கட்டி அறையில் வைக்கப்பட்ட காட்சியும், இன்னுமொரு சிறுமி இரு கைகளையும் கயிற்றால் கட்டி ஊஞ்சல் ஒன்றில் கட்டிவைத்து சித்திரவதை செய்த காட்சியும் காணொளிகளாக சில ஊடகங்களிலும் சமூக வலைத் தளங்களிலும் வெளியாகின.

இதனையடுத்து, பொலிஸார் மற்றும் மனித உரிமை ஆணைக் குழுவினர் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதில் வாய்பேச முடியாத இரு பிள்ளைகளையே இவ்வாறு கட்டிவைத்து சித்திரவதை செய்துள்ளதாகவும், அங்கு கடமையாற்றி வரும் சிலர் சிறுவர்களுக்கு நன்கொடையாளர்களால் வழங்கப்பட்ட பாவனைப் பொருட்களைத் திருடிச் செல்வதாகவும், அதனைக் கண்டுபிடித்து அவர்களை எச்சரித்த கோபத்தினால் இவ்வாறு செய்துள்ளதாக பாராமரிப்பு நிலையப் பொறுப்பாளர் கூறியுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதேநேரம், அங்கு கடமையாற்றும் 3 பேரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளதாகவும் ஏனைவர்கள் வீட்டுக்குச் சென்ற நிலையில் அவர்களின் வாக்குமூலங்கள் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அதன் பின்னரே இந்த சித்திரவதையை செய்தவர்களை கைது செய்து நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தோடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் சிறுவர் பெண்கள் பிரிவு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# தமிழ், முஸ்லிம் இன நல்லுறவை கட்டியெழுப்ப கலாசார நிகழ்வு

அக்கரைப்பற்று, ஏப். 22

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரிட்டிஷ் கவுன்ஸில் நிதிப்பங்களிப்புடன் முஸ்லிம் எய்ட் நடைமுறைப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் சம்மாந்துறையில் செயற்படுத்தப்படும் ‘ஒரு மாற்றத்தை நோக்கி’ குழுவின் ஏற்பாட்டில் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் இன நல்லுறவை கட்டியெழுப்பும் நோக்கில் கலை கலாசார நிகழ்வுகளும், சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழாவும் சம்மாந்துறை கோரக்கர் வித்தியாலய மைதானத்தில் கோலாகலமாக இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மத் ஹனீபா, சம்மாந்துறை கோரக்கர் தமிழ் மகா வித்தியாலய அதிபர் இளங்கோவன், பள்ளிவாசல் நிர்வாக சபையினர், விளையாட்டு உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் போன்றவர்கள் கலந்து கொண்டனர்.



அத்துடன் சமூக நல்லிணக்கத்தை வெளிப்படுத்துவதற்காக ‘ஒரு மாற்றத்தை நோக்கி’ குழுவினர் ஒழுங்கு செய்திருந்த காட்சிப் பலகையில் இந்நிகழ்வுக்கு வருகை தந்த பிரதம விருந்தினர்கள் மற்றும் பொதுமக்கள் தமது கையொப்பங்களை பதிவு செய்தனர். (அ)

# மட்டக்களப்பில் கவனவீர்ப்பு

மட்டக்களப்பு, ஏப். 22

அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்திற்கு எதிராக வடகிழக்கு பெண்கள் கூட்டு மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று மட்டக்களப்பு மனித உரிமை ஆணைக் குழு பிராந்திய அலுவலகத்திற்கு முன்னாள் நேற்று முன் தினம் வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சமூக செயற்பாட்டாளர்கள், பெண்கள், பொதுமக்கள், புத்திஜீவிகள்,சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்திற்கு எதிராக தமது எதிர்ப்பை தெரிவித்தனர். (அ)

# கிழக்கு மாகாண வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்




அக்கரைப்பற்று, ஏப். 21

கனடா எல்சன் பூப்பந்தாட்ட கழகத்தால் கிழக்கு மாகாணத்தில் முதல்முறையாக விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன் தினம் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கனடாவிலிருந்து வருகைதந்த அ.ஜெயகாந் எல்சன் பூப்பந்தாட்டக் கழகத்தின் அனுசரணையில் இந்த உபகரணங்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட பூப்பந்தாட்ட வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

அதனை தொடர்ந்து வீரர்களுக்கான பயிற்சி முகாமும் இடம்பெற்றது.

கனடா எல்சன் பூப்பந்தாட்ட கழகமானது கடந்த காலங்களில் வட மாகாண வீரர்களுக்கான உதவிகளையும் பயிற்சி முகாம்களை நடத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# திருக்கோவில் மயானம் கடலரிப்பினால் சேதம்!



அக்கரைப்பற்று, ஏப். 22

திருக்கோவில் பிரதேச மயானம் கடலரிப்பின் ஆபத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக திருக்கோவில் மயான பிரதேசத்தில் கடல் அரிப்பு மிகவும் மோசமான நிலையில் காணப்படுகிறது.

அதன் காரணமாக அங்கிருந்த கல்லறைகள் சில கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளன .

மயானப் பிரதேசமும் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக திருக்கோவில் உதவி பிரதேச செயலாளர் கந்தவனம் சதிசேகரனிடம் கேட்டபோது,

மயானப்பகுதி வழமை போல கடல் அரிப்புக்கு உள்ளாகி வருகின்றது உண்மை . கரையோர பாதுகாப்பு திணைக்களத்தினர் அங்கு கல் போடுவதற்கான ஏற்பாடுகளை செய்து இருக்கின்றார்கள்-என்றார்.

கடந்த காலங்களில் திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்திற்கு முன்பாக பாரிய கடலரிப்பு ஏற்பட்டிருந்த வேளையிலே கல்லணை போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சோதனையின்போது வெடித்து சிதறிய ஸ்டார்ஷிப் ரொக்கெட்!

## நிலவுக்கும் செவ்வாய்க்கும் உல்லாசப் பயணம் செல்லும் மனிதனது திட்டத்தின் முயற்சி

ரெக்சாஸ், ஏப். 22

**அமெரிக்கக் கோடீஸ்வரர் எலன் மாஸ்க்கின் 'ஸ்பேஸ்எக்ஸ்' நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட உலகின் முதலாவது மிகப்பெரிய ஸ்டார்ஷிப் விண்வெளி ரொக்கெற் அதன் சோதனைப் பறப்பின் போது வெடித்துச் சிதறியுள்ளது.**




மனிதர்களைச் செவ்வாய்க் கோளுக்கு உல்லாசப் பயணம் அழைத்துச் செல்வதற்காக சுமார் மூன்று பில்லியன் டொலர்கள் செலவில் வடிவமைக்கப்பட்ட அந்த ரொக்கெற் உலகின் சக்தி வாய்ந்ததும் - மிக உயரமான - நாற்பது மாடிக் கட்டடம் அளவுக்கு உயர்ந்த - முதலாவது விண்வெளி ஊர்தி ஆகும்.

அமெரிக்காவின் ரெக்சாஸ் மாநிலத்தில் தெற்கு முனையில்-மெக்ஸிக்கோ எல்லையோரம்- அமைந்துள்ள ஏவு தளத்தில் இருந்து விண்வெளிக்குச் செலுத்தப்பட்ட அது புறப்பட்டு நான்கு நிமிடங்களில் வானில் வெடித்தது. உலகத்தைச் சுற்றிப் பறக்கின்ற பரீட்சார்த்த முயற்சியில் சுமார் 400 அடி நீளமான அந்த ராட்சத வடிவ ரொக்கெற் மனிதர்களையோ அன்றி செயற்கைக் கோள்களையோ சுமந்து செல்லவில்லை.

இந்த ரொக்கெட் மூலம் நிலவுக்கும் செவ்வாய்க் கிரகத்துக்கும் மனிதர்களை உல்லாசப் பயணம் அனுப்புவதற்கு "ஸ்பேஸ் எக்ஸ்" நிறுவனம் திட்டமிட்டுள்ளது. முதலாவது சோதனை முயற்சி தோல்வி அடைந்தாலும் தவறுகள் சரிசெய்யப்பட்டு விரைவில் அடுத்த பறப்பு முயற்சி முன்னெடுக்கப்படும் என்று "ஸ்பேஸ்எக்ஸ்" நிறுவனத்தின் அறிவியலாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

ரெக்சாஸில் இருந்து ரொக்கெற் கிளம்பிய போது அதனை வழியனுப்பிவைப்பதற்காகக் கூடியிருந்தவர்களிடையே எலன் மாஸ்க்கும் காணப்பட்டார். ரொக்கெற் வெடித்தபோதிலும் அது வானில் பறந்த ஓரிரு நிமிடங்களும் ஒரு சாதனையே என்றும் அடுத்த பயணத்துக்கு அதில் அனுபவங்களைக் கற்றுக் கொண்டோம் என்றும் அவர் தனது ருவீற்றர் செய்தி ஒன்றில் பதிவிட்டுள்ளார்.

ஸ்டார்ஷிப் ரொக்கெட் அதன் பரீட்சார்த்தப் பறப்பு முயற்சியில் தோல்வியடைவது இது இரண்டாவது தடவை ஆகும். எது எவ்வாறாயினும் ரொக்கெற்றின் இன்றைய பறப்பு

'ஸ்பேஸ்எக்ஸ்' நிறுவனத்துக்கு ஒரு பெரும் வெற்றியே என்று விண்வெளி அறிவியலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

(அ)



# ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய சட்டத்தால் சர்ச்சை!

கோலாலம்பூர், ஏப். 22

ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய சட்டத்தால் சர்ச்சை நிலைமை ஏற்பட்டுள்ளது.

மலேசியா, காடுகளை அழிப்பது தொடர்பிலான ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய சட்டத்தைச் சாடியிருக்கிறது.

அந்தச் சட்டம் தனது செம்பனை எண்ணெய்த் துறைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்று மலேசியா குறிப்பிட்டுள்ளது.

காடுகளை அழித்த நிலத்திலிருந்து விளையும் பொருள்களின் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஒன்றியத்திற்குள் எண்ணெய் வித்துகளின் சந்தையைப் பாதுகாக்கும் நோக்கிலேயே புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக மலேசியத் துணைப் பிரதமர் பதில்லா யூசப் கூறினார்.

புதிய சட்டம், மலேசியாவின் சிறிய விவசாயிகளையே அதிகம் பாதிக்கும் என அவர் குறிப்பிட்டார்.

மலேசியாவும் இந்தோனேசியாவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய சட்டத்திற்கு முறையான பதில் அளிப்பது குறித்து யோசித்து வருகின்றன.

செம்பனை எண்ணெய் உற்பத்தியில் அந்த இரு நாடுகளும் முன்னணி வகிக்கின்றன. அதனை அதிகம் இறக்குமதி செய்கிறது ஐரோப்பிய ஒன்றியம்.

இரு நாடுகளின் அமைச்சர்களும் அடுத்த மாத இறுதியில் பிரசல்ஸில் ஐரோப்பிய ஆணையத்துடன் பேச்சு நடத்தவிருக்கின்றனர்.

(அ)

# லண்டனில் இயக்கப்பட்டு வரும் சீன இரகசிய காவல் நிலையம்!

லண்டன், ஏப். 22

பிரிட்டன் தலைநகர் லண்டனில் சீனாவின் இரகசிய காவல் நிலையம் ஒன்று இயங்குவதாக வெளியான தகவல் குறித்து பிரிட்டன் அரசாங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

தெற்கு லண்டனில் உள்ள க்ராய்டனில் சீன இரகசிய காவல் நிலையம் இருப்பதாகக் கூறப்படும் அறிக்கை மிகவும் கவலைக்குரியது என்றும், தனது குடிமக்களை துன்புறுத்தும் சீனாவின் எந்த முயற்சியையும் பொறுத்துக்கொள்ள முடியாது என்றும் பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவின் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சிக்கு நிதி திரட்டும் விருந்துகளை ஏற்பாடு செய்த சீன தொழிலதிபர் லின் ருவெய்யாவ் அந்த காவல் நிலையத்துடன் தொடர்புடையவர் என வெளியான அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சீன காவல் நிலையத்தை உடனடியாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் ரிஷி சுனக்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை பிரித்தானியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உரசல்களின் வளர்ந்து வரும் பட்டியலைச் சேர்க்கிறது. இது உலக ஒழுங்கிற்கு சவால் என பிரதமர் ரிஷி சுனக் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவின் உள்துறை துணையமைச்சர் கிறிஸ் பில்ப் , இது குறித்து சட்ட அமுலாக்க சமூகம் விசாரணை நடத்தி வருவதாகவும், வெளிநாடுகளில் செயல்படும் அதிகாரச் சக்திகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், தற்போது இந்த வழக்கு குறித்து கருத்து தெரிவிக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.



மேலும், உலகம் முழுவதும் உள்ள சுமார் 100 சீன காவல் நிலையங்கள் குறித்து பிரித்தானிய அரசாங்கம் அறிந்திருப்பதாக பில்ப் கூறியுள்ளார்.

(அ)

# உக்ரைனுக்கு பதிலாக ரஷ்ய நகரத்தையே குண்டு வீசித் தாக்கிய ரஷ்ய விமானங்கள்!



கீவ், ஏப். 22

உக்ரைன் மீது தாக்குதல் நடத்த நேற்று ரஷ்யாவின் அதிநவீன போர் விமானங்களில் இருந்து சீறி பாய்ந்த குண்டுகள் உக்ரைனுக்கு பதில் உக்ரைன் எல்லையில் உள்ள ரஷ்ய நகரமான பெல்கோ ரோட் நகர் மீது விழுந்தது.

சுகோய்-34 வகை விமானம் ஒன்றே உக்ரைன் எல்லைக்கு தாக்குதல் நடத்த புறப்பட்டு சென்று தவறுதலாக ரஷ்ய நகரை தாக்கியுள்ளது.

இந்த தாக்குதலில் பெல்கோரோட் நகரின் வீதிகளில் சுமார் 20 அடி ஆழத்துக்கு பள்ளம் ஏற்பட்டதோடு பல கட்டிடங்கள், வீடுகள் இடிந்தன.

மேலும் வீதிகளில் நடந்து சென்ற 2 பெண்கள் படுகாயம் அடைந்தனர். இந்த தாக்குதல் குறித்து அறிந்ததும் ரஷ்ய ராணுவ அதிகாரிகள் விரைந்து சென்று விசாரித்தனர்.

இதில் ரஷ்ய நகர் மீது தவறுதலாக தாக்குதல் நடந்துவிட்டது தெரியவந்தது. இதனை ரஷ்ய இராணுவ உயர் அதிகாரிகள் அதிகாரபூர்வமாக தெரிவித்தனர்.

மேலும் தவறு நடந்தது எப்படி? போர் விமானத்தின் குறி தவறியது ஏன்? என்பது குறித்து உயர் அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# உக்ரைன் தலைநகரில் திடீரென ஒளிப்பிழம்பு

கீவ், ஏப். 22

உக்ரைன் தலைநகரில் திடீரென தோன்றிய பிரகாசமான ஒளிப்பிழம்பு காரணமாக அந்த பகுதி மக்கள் பதற்றம் அடைந்தனர்.

கடந்த ஒரு ஆண்டாக உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்து வரும் நிலையில் அவ்வப்போது கடும் தாக்குதலை நடத்தி வருகிறது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 10 மணி அளவில் கீவ் என்ற நகரின் வான் பரப்பில் திடீரென பிரகாசமான ஒளிப் பிழம்பு தோன்றியது.

மேலும் மக்களை எச்சரிக்கும் வகையில் விமான தாக்குதலுக்கான சைரன்களும் ஒலிக்கப்பட்டதால் பொதுமக்கள் பதற்றம் அடைந்தனர்.

இருப்பினும் எந்த ஒரு தாக்குதலும் தலைநகரில் நடத்தப்படவில்லை என்று இராணுவம் சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

நாசாவின் செயல் இழந்த செயற்கைக்கோள் அல்லது விண்கல் வான் பரப்பில் எரிந்து விழுந்ததால் இந்த ஒளிப்பிழம்பு தோன்றி இருக்கலாம் என உக்ரைன் விமானப் படை தெரிவித்துள்ளது.

(அ)

# கோலி, டு பிளசிஸ் அபாரம் பெங்களூர் இலகு வெற்றி!

மொகாலி, ஏப். 22

ஐ. பி. எல். இருபது - 20 கிரிக்கெட் தொடரில் பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 24 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி. அந்த அணிக்கு இது 3ஆவது வெற்றியாக அமைந்தது.

மொகாலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூார் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 174 ஓட்டங்கள் குவித்தது.

அணித் தலைவர் விராட் கோலி 47 பந்துகளில், ஒரு சிக்ஸர், 5 பௌண்ட்ரிகளுடன் 59 ஓட்டங்களும் தாக்கத்தை ஏற்படுத்தும் (இம்பேக்ட் பிளேயர்) விதியின் கீழ் களமிறங்கிய டு பிளெசிஸ் 56 பந்துகளில், 5 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரிகளுடன் 84 ஓட்டங்களும் விளாசினர்.

இந்த இணை முதல் விக்கெட்டுக்காக 16.1 ஓவரில் 137 ஓட்டங்களைக் குவித்தது. கிளென் மக்ஸ்வெல் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஹர்பிரீத் பிரார் பந்தில் ஆட்டமிழந்தார். தினேஷ் கார்த்திக் 7 ஓட்டங்களுடன் அர்ஷ்தீப் பந்தில் நடையை கட்டினார். மஹிபால் லாம்ரோர் 7, ஷாபாஷ் அகமது 5 ஓட்டங்கள் சேர்த்தனர். பஞ்சாப் அணி தரப்பில் ஹர்பிரீத் பிரார் 2 விக்கெட்கள் கைப்பற்றினார்.

175 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி தொடக்கத்திலேயே ஆட்டம் கண்டது. அதர்வா தைடே 4, லியொம் லிவிங்ஸ்டன் 2 ஓட்டங்களில் முகமது சிராஜ் பந்தில் ஆட்டமிழந்தனர். மத்தியூ ஷார்ட் 8 ஓட்டங்களில் ஹசரங்கா பந்தில் விக்கெட்டை இழந்தார். ஹர்பிரீத் சிங் பாட்டியா (13), அணித் தலைவர் சாம் கரன் (10) ஆகியோர் ரன் அவுட் ஆனார்கள். 9.5 ஓவர்களில் 76 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து பஞ்சாப் அணி தடுமாறியது. சீராக விளையாடி வந்த பிரப்சிம்ரன் சிங் 30 பந்துகளில், 4 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகளுடன் 46 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வெய்ன் பர்னல் பந்தில் போல்ட் ஆனார்.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஷாருக்கான் 7 ஓட்டங்களில் ஹசரங்கா பந்தில் தினேஷ் கார்த்திக்கால் ஸ்ரொம்ப் அவுட் செய்யப்பட்டார். கடைசி 7 ஓவர்களில் பஞ்சாப் அணியின் வெற்றிக்கு 65 ஓட்டங்கள் தேவையாக இருந்த நிலையில் ஜிதேஷ் சர்மா, ஹர்பிரீத் பிரார் இணை போராடி அணியை வெற்றிக்கு அருகே கொண்டு சென்றது.

3 ஓவர்களில் வெற்றிக்கு 30 ஓட்டங்கள் தேவையாக இருந்த நிலையில் 18ஆவது ஓவரை வீசிய முகமது சிராஜ் இரு விக்கெட்களை வீழ்த்தி ஆட்டத்தை பெங்களூர் அணியின் பக்கம் திருப்பினார். இந்த ஓவரின் 3ஆவது பந்தில் ஹர்பிரீத் பிராரையும் (13), கடைசி பந்தில் நதன் எலிஸையும் (0) வெளியேற்றினார்.




வெறும் 4 ஓட்டங்களை மட்டுமே விட்டுக் கொடுத்து முகமது சிராஜ் கைப்பற்றிய இந்த இரு விக்கெட்களும் பெரிய அளவில் திருப்புமுனையை ஏற்படுத்தியது. கைவசம் ஒரு விக்கெட் மட்டுமே இருந்த நிலையில் அர்ஷ்தீப் சிங்குடன் இணைந்து போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்ட ஜிதேஷ் சர்மா, ஹர்ஷல் பட்டேல் வீசிய 19ஆவது ஓவரின் 2ஆவது பந்தை தூக்கி அடித்த போது ஷபாஷ் அகமதுவிடம் பிடியெடுப்பானது.

இதனால், பஞ்சாப் அணியின் இன்னிங்ஸ் 18.2 ஓவர்களில் 150 ஓட்டங்களுக்கு முடிவடைந்தது. ஜிதேஷ் சர்மா 27 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 41 ஓட்டங்கள் சேர்த்தார். பெங்களூர் அணி சார்பில் முகமது சிராஜ் 4 ஓவர்களை வீசி 21 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்களை வீழ்த்தினார். ஹசரங்க 2 விக்கெட்களையும் வெய்ன் பர்னல், ஹர்ஷல் பட்டேல்ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

24 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பெங்களூர் அணிக்கு இது 3ஆவது வெற்றியாக அமைந்தது. இதன் மூலம் 6 புள்ளிகளுடன் பெங்களூர் அணி புள்ளிகள் பட்டியலில் 5ஆவது இடத்துக்கு முன்னேறியது. 6 போட்டிகளில் விளையாடி உள்ள பெங்களூர் அணி 3 தோல்விகளையும் பதிவு செய்துள்ளது.

(ஐ)




# வோர்ணர் அதிரடி ஆட்டம் டில்லிக்கு முதல் வெற்றி!

டில்லி, ஏப். 22

கொல்கத்தா அணியை நான்கு விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி டில்லி கப்பிட்டல்ஸ் அணி நடப்பு ஐ. பி. எல். தொடரில் முதல் வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

128 ஓட்டங்கள் என்ற எளிதான இலக்கை துரத்திய டில்லி அணிக்கு இம்முறையும் பிரித்வி ஷா பவர் பிளே ஓவர்களுக்குள் தனது விக்கெட்டை பறிகொடுத்தார். 13 ஓட்டங்கள் எடுத்திருந்த அவரை வருண் சக்கரவர்த்தி முதல் விக்கெட்டாக வீழ்த்தினார். பிரித்வி ஷா, நடப்பு தொடரில் எடுத்த அதிகபட்ச ஓட்டம் இதுவாகும். இதன்பின் வந்த மிற்செல் மார்ஷ் மற்றும் பிலிப் சால்ட் முறையே 2 மற்றும் 5 ஓட்டங்களில் வெளியேறினர்.

எனினும், வோர்ணர் சிறப்பாக விளையாடினார். மொத்தம் 11 பௌண்ட்ரிகளை விளாசிய வோர்ணர் 57 ஓட்டங்கள் சேர்த்திருந்தபோது வருண் சக்கரவர்த்தியன் பந்தில் ஆட்டமிழந்தார். மனிஷ் பாண்டே வழக்கம் போல், மெதுவாக விளையாடி 23 பந்துகளுக்கு 21 ஓட்டங்கள் எடுத்து பெவிலியன் திரும்பினார்.

இறுதியில் அக்சர் பட்டேல் பொறுப்புடன் விளையாட டில்லி அணி 6 விக்கெட் இழப்புக்கு 128 ஓட்டங்கள் எடுத்து வெற்றிபெற்றது. 4 விக்கெட் வித்தியாசத்தில் டில்லி அணி பெற்ற இந்த வெற்றிதான் நடப்பு ஐ. பி. எல். தொடரில் ருசிக்கும் முதல் வெற்றி ஆகும்.

கொல்கத்தா தரப்பில் வருண் சக்கரவர்த்தி, நிதிஷ் ராணா, அங்குள் ராய் தலா இரண்டு விக்கெட் வீழ்த்தினர்.

டில்லி அருண் ஜெட்லீ மைதானத்தில் நடைபெற்று வரும் இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி அணி கொல்கத்தா அணியை துடுப்பாட்டம் செய்ய பணிக்க, அதன்படி முதலில் களமிறங்கியது.

ஜசன் றோய் மற்றும் லிற்றன் தாஸ் தொடக்கம் கொடுத்தனர். 2 ஓவர்கள்கூட இந்த இணை தாக்குப் பிடிக்க முடியவில்லை. 4 ஓட்டங்கள் எடுத்திருந்த லிற்றன் தாஸ் விக்கெட்டை எடுத்து கொல்கத்தாவின் சரிவை தொடங்கிவைத்தார் முகேஷ் குமார். வெங்கேடஷ் ஐயர் விக்கெட்டை நோர்ட்ஜே வீழ்த்தினார். நிதீஷ் ராணாவை இஷாந்த் சர்மா கவனித்துக்கொள்ள மந்தீப் சிங் விக்கெட்டை எடுத்தார் அக்சர் பட்டேல்.

இதனால் 50 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டை இழந்து தடுமாறியது கொல்கத்தா. தொடர்ந்து ரிங்கு சிங், சுனில் நரைன் மற்றும் அங்குள் றோய் போன்றோரை சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க செய்து டில்லி பந்துவீச்சாளர்கள் கெத்துகாட்டினர். கொல்கத்தா தரப்பில் தொடக்கம் கொடுத்த ஜசன் றோய் 43 ஓட்டங்களுக்கு தனது விக்கெட்டை பறிகொடுக்க, 16 ஓவர்களில் எல்லாம் கொல்கத்தா 9 விக்கெட்டை இழந்திருந்தது.

எனினும், கடைசி கட்டத்தில் அந்த்ரே ரஸல் அந்த அணிக்காக போராடினார். ஆனால், அவரையும் பெரிய ஷொட்கள் ஆடவிடாமல் டில்லி பந்துவீச்சாளர்கள் சோதித்தனர். இறுதி ஓவரில் மட்டும் ஹட்ரிக் சிக்ஸ் அடித்து அதிரடி காண்பித்தார். இதனால், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 127 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது கொல்கத்தா. இறுதிவரை ஆட்டமிழக்கமல் இருந்த ரஸல் 38 ஓட்டங்கள் எடுத்தார்.

டில்லி தரப்பில் இஷாந்த் சர்மா, நார்ஜே, அக்சர் படேல், குல்தீப் யாதவ் தலா இரண்டு விக்கெட் வீழ்த்தினர்.

(ஐ)

# நியூசிலாந்து - பாகிஸ்தான் போட்டி ஆலங்கட்டி மழையால் நிறுத்தம்!


வெலிங்டன், ஏப். 22

நியூசிலாந்துக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நேற்று முன்தினம் நடக்கவிருந்த போட்டி ஆலங்கட்டி மழையால் கைவிடப்பட்டது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட நியூசிலாந்து அணி, மார்க் செப்மன், சாட் பவ்ஸ் ஆகியோர் குவித்த அதிரடி அரைச் சதங்களின் உதவியுடன் 18.5 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

மார்க் சப்மன் 42 பந்துகளில் 10 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸ் உட்பட 71 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். ஆரம்ப வீரர் சாட் பவ்ஸ் 38 பந்துகளில் 7 பவுண்டறிகள், ஒரு சிக்ஸூடன் 54 ஓட்டங்களைப் பெற்றார்.

இதனிடையே 49 ஓட்டங்களை பெற்றிருந்தபோது சர்வதேச இருபது 20 கிரிக்கெட் போட்டிகளில் 1000 ஓட்டங்களை செப்மன் பூர்த்தி செய்தார். அத்துடன், சாட் பவ்ஸூடன் 4ஆவது விக்கெட்டில் 54 ஓட்டங் களையும் ரச்சின் ரவீந்த்ராவுடன் 5ஆவது விக்கெட்டில் 56 ஓட்டங்களையும் செப்மன் பகிர்த்தார். ரச்சின் ரவிந்த்ரா 8 ஓட்டங்களை மாத்திரமே பெற்றார்.



நியூசிலாந்து அணி கணிசமான மொத்த எண்ணிக் கையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கையில் திடீரென பலத்த மழை பெய்ததுடன் அது ஆலங்கட்டி மழையாக மாறியது. இதனை அடுத்து போட்டியை கைவிட மத்தியஸ்தர்கள் தீர்மானித்தனர்.

பந்துவீச்சில் இமாத் வசிம் 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை வீழ்த்தினார்.

இரண்டு அணிகளுக்கும் இடையிலான 5 போட்டிக ள் கொண்ட சர்வதேச இருபது 20 கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் 2 - 1 என்ற ஆட்டக் கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

முதல் இரண்டு போட்டிகளில் 88 ஓட்டங்களாலும் 38 ஓட்டங்களாலும் பாகிஸ்தான் வெற்றி பெற்றது. 3ஆவது போட்டியில் 4 ஓட்டங்களால் நியூசிலாந்து வெற்றிபெற்றது.

இரண்டு அணிகளுக்கும் இடையிலான கடைசிப் போட்டி வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

# தேசிய அரசு அமைந்தால் நிபந்தனையற்ற ஆதரவு!

## மொட்டுக் கட்சி அறிவிப்பு



கொழும்பு, ஏப். 22

**எதிர்காலத்தில் திட்டமிட்ட கலந்துரையாடல்கள் மூலம் ஒரு தேசிய அரசாங்கம் அமைக்கப்படும் பட்சத்தில் மொட்டுக் கட்சி நிபந்தனையற்ற ஆதரவு வழங்கும் என அந்தக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**

தேசிய அரசாங்கம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- தேசிய அரசாங்கம் அமைப்பதாக இருந்தால் அதில் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதித்துவம் இடம்பெறவேண்டும் என்று சிலர் கூறுகின்றனர்.

தற்போதுள்ள அரசாங்கத்தில் மொட்டுக் கட்சியைச் சேர்ந்த 4 அமைச்சர்கள் உள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி அமைச்சர்கள் இருவர் உள்ளனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் இருவர் உள்ளனர். ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அமைச்சர்களாக உள்ளனர். அதனால் இதுவும் ஒரு தேசிய அரசாங்கம்தான்.

எதிர்காலத்தில் திட்டமிட்ட கலந்துரையாடல்கள் மூலம் ஒரு தேசிய அரசாங்கம் அமைக்கப்படும் பட்சத்தில் மொட்டுக் கட்சி நிபந்தனையற்ற ஆதரவு வழங்கும்-என்றார். (அ)

# மகிந்தவை சந்தித்து பேசினார் பாக்லே!

கொழும்பு, ஏப். 22

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே நேற்று முன் தினம் வியாழக்கிழமை சந்தித்து பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, இலங்கையுடனான கடன் மறுசீரமைப்புக்கு இந்தியாவின் ஆதரவு உள்ளிட்ட பரஸ்பர நலன்கள் குறித்து இருவரும் விவாதித்துள்ளனர்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கி வரும் ஆதரவுக்கு இந்தியா துணைநிற்பதாகவும் இந்திய தூதுவர் கோபால் பாக்லே உறுதியளித்துள்ளார்.

மேலும், இலங்கையில் இந்திய முதலீடுகள் குறித்தும் இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.



நட்பு ரீதியிலும் சுமுகமான சூழ்நிலையிலும் நடைபெற்ற இந்தச் சந்திப்பு, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியது என முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (அ)



# முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இப்தார்

முல்லைத்தீவு, ஏப். 22

முஸ்லீம் மக்களின் சமய நிகழ்வில் ஒன்றாக கருதப்படுகின்ற இப்தார் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை 5.00 மணியளவில் மாவட்ட அரசாங்க அதிபர் திரு.க.விமலநாதன் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக அல் குர் ஆன் பாராயணம் மௌலவிகளான நவ்ல் , ஆதில் முதலியோரால் ஓதப்பட்டது.

தொடர்ந்து ஆசி உரையினை சர்வமதத் தலைவர்கள் வழங்கினர்.

ரமழான் விசேட உரையினை மௌலவி பைரூஸ் வழங்கினார்.

இறுதியாக அதான் நோன்பு திறக்கும் நிகழ்வுடன் இப்தார் நிகழ்வு நிறைவடைந்தது.

இந்த நிகழ்வில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் , மாவட்ட பிரதம கணக்காளர், மாவட்ட பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர், மாவட்ட உதவி அரசாங்க அதிபர், மாவட்ட பெறியியலாளர், ஏனைய உத்தியோகத்தர்கள், மதகுருமார்கள், மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# நோன்பு பெருநாளை முன்னிட்டு நாடு முழுக்க சிறப்பு பாதுகாப்பு!

கொழும்பு, ஏப். 22

நோன்பு பெருநாளை முன்னிட்டு பள்ளிவாசல்கள் தொடர்பில் பாதுகாப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவா தெரிவித்தார்.

அதன்படி, முஸ்லிம்கள் செறிவாக வாழும் மாகாணங்களில் பாதுகாப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# குரங்குகளின் ஏற்றுமதி சூழலுக்கு விரோதம் என்கிறார் ஐங்கரநேசன்

யாழ்ப்பாணம், ஏப். 22

குரங்குகளை சீனாவிற்கு ஏற்றுமதி செய்வதற்கான முடிவு குருட்டுத்தனமானது எனவும் இது சூழல் விரோதமானது என்பதுடன் நடைமுறைச் சாத்தியமற்றதென தமிழ்தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

குரங்குகளினால் விவசாயத்தில் ஏற்பட்டுவரும் பாதிப்புகளைக் கருத்திற்கொண்டு இலங்கையிலிருந்து ஒரு இலட்சம் செங்குரங்குகளைச் சீனாவின் மிருகக்காட்சிச் சாலைகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு தீர்மானித்திருப்பதாக விவசாய அமைச்சு தெரிவித்ததையடுத்துப் பலத்த வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டுள்ளன.

இதையடுத்து, கொழும்பு சீனத்தூதுவராலயம் இவ்வாறானதொரு கோரிக்கையைத் தாம் முன்வைக்கவில்லையெனத் தற்போது அறிவித்துள்ளது. சீனாவின் தனியார் விலங்குப் பண்ணையொன்றின் எழுத்துமூல கோரிக்கையின் அடிப்படையில் ஏற்றுமதி முடிவெடுத்த விவசாய அமைச்சும் சுருதி இறங்கி முதற்கட்டமாக ஐந்நூறு குரங்குகளை அனுப்ப இருப்பதாகத் தெரிவித்துள்ளது. இம்முடிவு குருட்டுத்தனமானதும் சூழல் விரோதமானதும் நடைமுறைச் சாத்தியம் இல்லாததும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சாடியுள்ளார்.

இலங்கையில் இருந்து சீனாவுக்குக் குரங்குகளை ஏற்றுமதி செய்வது தொடர்பாக பொ. ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்-

அழிந்துவரும் காட்டுயிரிகளின் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் சர்வதேச உடன்படிக்கையைச் சீனா ஏற்றுக் கொண்டிருப்பதால் குரங்குகளின் இறக்குமதிக்கு அனுமதி இல்லை என்றும் சீனத் தூதுவராலயம் தெரிவித்திருக்கிறது. ஆனால், சட்டபூர்வமான அனுமதி இல்லாத நிலையிலும் குரங்குகள் உட்பட அழிந்துவரும் பல காட்டுயிரிகளின் மிகப்பெரும் கறுப்புச்சந்தையாக இன்றளவும் சீனாவே இயங்கி வருகிறது. சீனஉணவகங்களில் குரங்கிறைச்சி அதிவிருப் பத்திற்குரிய தெரிவு என்பதாலும் ஆய்வகங்களில் குரங்குகள் சோதனை விலங்குகளாக அதிகம் தேவைப்படுவதாலும் சீனாவில் குரங்குகளுக்கான தட்டுப்பாடு எப்போதுமே நிலவுகிறது. இதனை ஈடுகட்டவே, ஜீவ காருண்யர்களின் தண்டனைகளில் இருந்து தப்ப மிருகக்காட்சிச் சாலைகளுக்கென்ற பெயரில் குரங்குகளின் வர்த்தகத்திற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

குரங்குகளால் பயிர்களின் உற்பத்திக்கும் விவசாயிகளுக்கும் ஏற்பட்டுவரும் பாதிப்புகள் பாரதூரமானவை. ஆனால், கடந்த சில தசாப்தங்களாகக் குரங்குகளின் கணக்கெடுப்பு நிகழாத நிலையில் குரங்குகளை ஏற்றுமதி செய்ய முற்படுவது இதற்கான தீர்வாக அமையாது. மாறாக, பின்நோக்கிச் சுடுவது போன்று பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். குரங்குகள் தமது உணவு முறையால் காட்டுவெளியெங்கும் விதைகளைத் தூவி மரங்களை இயற்கையாகவே நடவு செய்கின்றன. இதனால், காடுகளின் கட்டுமானத்தில் மையக்கல் இனங்களாகக் கருதப்படும் இக்குரங்குகள் அழிந்தால் காட்டுப் பரப்பளவு சுருங்கி இயற்கைச்சூழலின் சமநிலை குலையும். காபன் உறிஞ்சிகளான காடுகள் சுருங்குவதால் பாதகமான காலநிலை மாற்றங்கள் விரைவுபடுத்தப்பட்டு விவசாயமும் வீழ்ச்சியுறும்.

செங்குரங்குகள் இலங்கைக்கு மட்டுமே உரித்தான ஓர் உள்நாட்டு இனம். இதனைச் சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம் அழிவை எதிர்நோக்கியுள்ள விலங்குகளில் ஒன்றாகப் பட்டியலிட்டுள்ளது. சீனாவைப் போன்றே இலங்கையும் அழிந்து வரும் காட்டுயிரிகளின் சர்வதேச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்நிலையில் எதனையுமே விற்று டொலர்களாக்கும் முனைப்பில் உள்ள அரசாங்கம் சட்டபூர்வமான முறையில் நடைமுறைச்சாத்தியமற்ற செங்குரங்குகளின் ஏற்றுமதி குறித்துத் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதை உடனடியாக நிறுத்துதல் வேண்டும். கூடவே, குரங்குகளினால் விவசாயத்துறைக்கு ஏற்பட்டுவரும் பாதிப்புகளைக் களைய ஒருங்கிணைந்த மாற்றுப் பொறிமுறையொன்றையும் விரைந்து நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும்- என்று கூறியுள்ளார். (அ)

# தேசிய அரசமைக்கும் யோசனை அமைச்சரவைக்கு வரவில்லை!

கொழும்பு, ஏப். 22

“தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவில்லை. தேசிய அரசாங்கம் தொடர்பாக எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை” என்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசித்து வருகின்றார் என்றும், பாராளுமன்றத்தில் இது தொடர்பான அழைப்பை விடுப்பார் என்றும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பில் வினவப்பட்டபோதே விவசாய அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பில் எதுவும் கலந்துரையாடவில்லை என்றும் மகிந்த அமரவீர தெரிவித்தார். (அ)

## நாடு..

பாக நிறைவடைந்தது. ஏறக்குறைய 38 கிலோ மீற்றர் தூரம் உடைய இந்த நடைபவனியானது. சுமார் 13 மணித் தியாலங்கள் நீடித்திருந்தது.

இந்த நடைபவனியில் பங்கேற்றவர்கள் செபமாலை உச்சரித்தும் வேத பாடல்களை பாடியும் ஆன்மீக ரீதியான செயல்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது புனித அந்தோனியார் மற்றும் புனித செபஸ்தியார் ஆகியோரின் திருவுருங்களை தாங்கிய அலங்கரிக்கப்பட்ட தேரும் கடுவாப்பிட்டியிலிருந்து கொச்சிக்கடைக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

கொழும்பு மறை மாவட்டத்தின் கத்தோலிக்க தேவாலயங்களிலிருந்தும் கத்தோலிக்கர்கள் பலரும் மனிதச் சங்கிலி போராட்டத்தில் இணைந்து உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் எனக் கோரி என பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

இந்த மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் இந்து, இஸ்லாம், பௌத்த மதத்தினரென அனைவரும் வேறுபாடின்றி கலந்து கொண்டிருந்தனர்.

### பலியானோரை நினைவுகூரல்

மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் திருத்தலத்தில் நடைபெற்ற நினைவு தின நிகழ்வின் போது, ஆலய முன்றலில் காலை 8.45 மணிக்கு 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதையடுத்து ஆலய மணியோசையும் எழுப்பப்பட்டது.

### சர்வ மத பிரார்த்தனை

சர்வ மத பிரார்த்தனையுடன் நடைபெற்ற இந்த நினைவு தின நிகழ்வில், பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி பிரைன் உடைக்வே, பொன்னம்பலவானேஸ்வரர் ஆலய பிரதம குருக்கள் சிவசுரேஷ், மௌலவி அப்துல் ரஹ்மான், ஓமல்பே சோபித தேரர் உள்ளிட்ட தேரர்கள்,

இலங்கை அங்கிலிக்கன் திருச்சபைத் தலைவர் ஆயர் துஷாந்த றொட்ரிகோ, இலங்கை மெதடிஸ்த திருச்சபைத் தலைவர் எபினேசர் ஜோசப் உள்ளிட்ட ஏனைய கிறிஸ்தவ மத தலைவர்களும் பங்கேற்றிருந்தனர். மேலும், பலியானவர்களின் குடும்ப உறுப்பினர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

### வெளிநாட்டு பிரதிநிதிகள் பங்கேற்பு

பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் உயர்ஸ்தானிகர்கள், ஐரோப்பிய சங்க பிரதிநிதிகள் என வெளிநாட்டு பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

### மெழுவர்த்தி ஏந்தல்

கொச்சிக்கடை புனித அந்தோனியர் திருத்தலத்தில் பலியானவர்களின் பெயர்கள் தாங்கிய நினைவேந்தல் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி பிரைன் உடைக்வே, கொழும்பு மறை மாவட்ட துணை ஆயர் அன்ரன் ரஞ்சித், அருட் தந்தையர்கள், சகல மதத் தலைவர்கள், உயர்ஸ்தானிகர்கள் மற்றும் பலியானவர்களின் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் மெழுகுதிரிகளை ஏந்தி கொல்லப்பட்டோரின் ஆத்ம இளைப்பாற்றுக்காக வேண்டினர்.

நன்கொடையாளர்களிடம் இருந்து பெறப்பட்ட நிதியைக் கொண்டு புற்று நோயால் அவதியுறும் நோயாளர்களின் மருத்துவ சிகிச்சைக்களுக்கான 78 இலட்சம் ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணத்தை மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை மஹரகம அபேக்ஷா மருத்துவமனையின் மருத்துவர்கள் ரொஷான் அமரதுங்க மற்றும் குமாரி வாஸ் ஆகியோரிடம் கையளித்தார்.

### நினைவு திருப்பலி

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதல்களில் பலியானவர்களுக்கான நினைவுத் திருப்பலி காலை 11 மணிக்கு மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை மற்றும் கொழும்பு மறை மாவட்ட துணை ஆயர் அன்ரன் ரஞ்சித் ஆகியோரால் கூட்டாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. கடுவாப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலயத்தில் நடைபெற்ற நினைவு திருப்பலியை கொழும்பு மறை மாவட்ட துணை ஆயர்களான மெக்ஸ்வெல் சில்வா, அன்தனி ஜயக்கொடி ஆகியோரினால் காலை 7.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும், கொழும்பு மறை மாவட்டத்திலுள்ள சகல தேவாலயங்களிலும் நாட்டிலுள்ள பிரதான சில கத்தோலிக்க தேவாலயங்களிலும் காலை 7 மணிக்கு நினைவுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

### மட்டக்களப்பில்...!

மட்டக்களப்பு சீயோன் தேவாலய போதகர் ரொஷான் மகேசன் தலைமையில் நேற்று காலை 8 மணி முதல் 9 மணி வரை விசேட ஆராதனைகள் இடம்பெற்றிருந்தன. செப தோட்டமொன்றும் திறந்து வைக்கப்பட்டது. 2019 ஏப்ரல் 21ஆம் திகதியன்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்களில் 272 பேர் பலியானதுடன், 500 இற்கும் அதிகமானோர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

(தொடர்புடைய செய்திகள் பக்கம் 16 மற்றும் உள் பக்கங்களிலும்)

## புதிய...

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் 4ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடைபெற்ற விசேட ஆராதனைகளின் பின்னர் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான முன்னெச்சரிக்கை பலமுறை அளிக்கப்பட்டாலும் அது ஏன் பெரிதாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. தெகிவளையில் தற்கொலைதாரி தன்னைத் தானே வெடிக்க செய்ய ஏன் அனுமதிக்கப்பட்டார் என்பவற்றை தீர்மானிக்க புதிய அதேசமயம் வெளிப்படையான விசாரணை தேவை.

இந்தோனேசியாவில் ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்பை அழைத்து உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பொறுப்பேற்க கோரிய 'ஷோனிக் ஷோனிக்' என்று குறிப்பிடப்படும் நபர் யார்? அவர் ஏன் கைது செய்யப்படவில்லை. இந்தக் கேள்விகளுக்கான பதில்களை கண்டறிய எங்களுக்கு ஒரு புதிய விசாரணை தேவை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு சட்டமா அதிபர் திணைக்களமும் பொலிஸாரும் தயக்கம் காட்டி, பகிரங்க மாக முதலை கண்ணீர் சிந்துகின்றனர். நேர்மையான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயங்குவது வேதனையளிக் கிறது.

அரச தரப்பின் வார்த்தைகளுக்கும் செயல்களுக்கும் இடையிலான இடைவெளி தெளிவாக புலப்படுவதாகவும் கத்தோலிக்க திருச்சபையுடன் நேர்மையான பேச்சுக்கு தயார் என அண்மையில் அறிவித்த தற்போதைய ஜனாதிபதியும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் இரட்டைக் கொள்கையை கடைப்பிடிக்கின்றார்களா என்ற கேள்வி தமக்குள்ளதாகவும் அவர் கூறினார்.

மக்களின் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் மனித மேன்மையையும் அழித்து, ஏகாதிபத்தியத்துடன் மக்களின் இறையாண்மையை எட்டி உதைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நாட் டின் தலைமையின் மீது இன்று நம்பிக்கை கொள்ள முடியாது - என்றும் கூறினார். (ஐ)

## தேசிய...

சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரி வித்தார்.

தேசிய அரசாங்கம் குறித்து நேற்று அவரிடம் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தேசிய அரசாங்கம் குறித்து நாம் எந்தவொரு கலந்துரையாடல்களையும் முன்னெடுக்கவில்லை. அதனை நாம் விரும்பவும் இல்லை. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி காலம் முதல் சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்பதே சுதந்திர கட்சியின் நிலைப்பாடாகக் காணப்படுகிறது. எனினும், அவ்வாறான தோர் அரசாங்கத்தை அமைப்பதற்கு எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை.

இன்றும் நாம் அதனையே வலியுறுத்துகின்றோம். எனவே, குறுகிய காலத்துக்காகவது அனைத்து கட்சிகளும் கொள்கை ரீதியில் ஒன்றிணைந்து முன்னோக்கி செல்ல வேண்டும். இத னையடுத்து தேர்தல் ஊடாக எவருக்கும் ஆட்சியமைப்பதற்கும் பதவிகளை ஏற்பதற்கும் வாய்ப்புகள் உண்டு. வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை கட்டியெழுப்பு வதற்கு அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்குவதற்கும் நாம் தயாராகவே உள்ளோம்.

அனைத்து கட்சிகளின் பங்கேற்புடன் குறுகிய அமைச்சரவையை கொண்ட சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்பதையே நாம் வலியுறுத்துகின்றோம். ஆனால், தற்போது தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கான முயற்சிகளே முன்னெடுக்கப்படுகின்றன. தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டால் அமைச்சரவை எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படும்.

அமைச்சு பதவிகளுக்காக அன்றி நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் தயாராக உள்ளனர் என்றால், முறையான வேலைத்திட்டத்துடன் 10 ஆண்டுகளுக்குள் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் - என்றார். (ஐ)

## தென்பட்டது...

கையின் பின்னர் நேற்று ஆரம்பமானது. இதன்போதே, இந்த விடயம் அறிவிக்கப்பட்டது.

ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்ற இஸ்லாமியர்கள் இன்று ஈகை திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றனர். (ஐ)

## தமிழ் மொழி...

தெரிவித்தார்.

இதேவேளை, சிங்களம் மற்றும் ஆங்கில மொழிமூல பரீட்சை விடைத்தாள்களை திருத்தும் பணிகளுக்கான விண்ணப்பங்கள் போதிய அளவில் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் பணிகளை ஆரம்பிப்பது தொடர்பாக உரிய தரப்புகளுடன் பேச்சு நடத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பள்ளிவாசல்...

கிடைத்த நிலையில் அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட் டிருந்தது.

இந்த நிலையில், நாடு முழுவதும் உள்ள பள்ளிவாசல்கள், இஸ்லாமியர்கள் அதிகளவில் வாழும் பகுதிகளிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில், மாகாணங்களுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு அதற்கான ஆலோசனைகள் வழங்கப் பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார். (ஐ)

## உயர் நீதிமன்றின்..

வழங்கும் திருத்தங்களை முழுமையாக செயல்படுத்துவோம். நீதிமன்றத்துக்கு அப்பாற்பட்டு செயற்பட முடியாது என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உத்தேச பயங்கர எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பான கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்குகிறார்கள். அரசியல்வாதிகள் தங்களின் அரசியல் தேவைகளுக்காக தேசிய பாதுகாப்பை பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவம் ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு பிரதான காரணியாக அமைந்தது. தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கி மக்கள் அரசியல் ரீதியில் எடுத்த தீர்மானம் தவறானது என்பது குறுகிய காலத்துக்குள் உறுதிப்படுத்தப்பட்டது.

நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தில் தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் ஜனாதிபதி வசமிருத்தல், பொலிஸார் முன்னிலையில் வழங்கப்படும் சாட்சியம் உள்ளிட்ட இரு காரணிகள் குறித்து தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டன.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூல வரைபில் இந்த இரு விடயங்களும் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட தடுப்புக் காவல் பிறப்பிக்கும் உத்தரவு இச்சட்டமூலத்தில் பொலிஸ்மா அதிபர் உட்பட மாகாண பிரதி பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், பொலிஸார் முன்னிலையில் வழங்கும் சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் அல்லது பிரதி பொலிஸ்மா அதிபர் தங்களின் விருப்பத்துக்கு அமைய தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்க முடியாது.

பயங்கரவாத செயல்பாடுகள் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் நபரை கைது செய்யவும், தடுப்புக் காவல் உத்தரவில் வைக்கவும் நீதிவான் நீதிமன்ற நீதிவானின் அனுமதி பெற வேண்டும். தடுப்புக் காவல் உத்தரவு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட வேண்டும். தடுப்புக் காவலில் வைக்கப்படும் நபர் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட வேண்டும்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் 'பயங்கரவாதம்' என்ற சொல் பதத்துக்கு நீண்ட வரைவிலக்கணம் குறிப்பிடப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

மனித படுகொலை, அரச மற்றும் தனியார் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல், படுகாயம் ஏற்படுத்தும் வகையிலான தாக்குதல் ஆகியவற்றை பயங்கரவாதம் என்று குறிப்பிடாமல் ஜனநாயகம் என்றா குறிப்பிட வேண்டும்?

ஜனநாயகம், அடிப்படை உரிமைகள் தொடர்பில் கருத்துரைக்கும் பெரிய பிரித்தானியா, அமெரிக்கா மற்றும் ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளில் இவ்வாறான தன்மைகளே பயங்கரவாத தடைச்சட்டத்தில் காணப்படுகிறது.

சமூக கட்டமைப்பில் காணப்படும் பாதாள குழுக்கள், கூலிப்படையினர் ஆகிய தரப்புக்கள் மேற்குலக நாடுகளில் பயங்கரவாத செயல்பாடுகளாக கருதப்படுகின்றன.

மக்களின் உயிர் வாழும் உரிமையை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி அடிப்படை உரிமைகளை பாதுகாப்பது அவசியமற்றது. அரசாங்கம் என்ற ரீதியில் மக்களின் உயிர் வாழும் உரிமையை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தவுடன் ஒரு தரப்பினர் நிச்சயம் சட்டமூலத்தை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்துவார்கள்.

சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கும் அறிவுறுத்தலை முழுமையாக செயல்படுத்துவோம். நீதிமன்றத்துக்கு அப்பால்பட்டு செயல்பட முடியாது - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# யாழ்.பல்கலையிலும் அஞ்சலி






யாழ்ப்பாணம், ஏப். 22

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் 4 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று பிற்பகல் 1.00 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த நிகழ்வின்போது தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அக வணக்கம் செலுத்தப்பட்டதுடன் மலரஞ்சலியும் இடம்பெற்றது.

இதில் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் பங்கேற்றனர். (அ)

# ஜெனிவா தீர்ப்பாயத்தில் இலங்கைக்கு கண்டனம்!

## புலிகள் இயக்கத்தின் உறுப்பினர் சித்திரவதை செய்யப்பட்டமைக்காக

ஜெனிவா, ஏப். 22

இலங்கையில் சித்திரவதை செய்யப்பட்ட முன்னாள் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர் ஒருவர் தொடர்பில் விசாரணைகளை நடத்திய ஐக்கிய நாடுகள் தீர்ப்பாயத்தின் 17 நீதிபதிகளும் இலங்கைக்கு எதிராக ஏகமனதாகத் தீர்ப்பளித்துள்ளனர்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து வெளியேறிய முன்னாள் உறுப்பினர் ஒருவர் சுவிட்சர்லாந்திற்குத் தப்பிச் செல்வதற்கு முன்னர், இலங்கை பொலிஸாரினாரால் ஒரு மாத காலம் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட வழக்கு தொடர்பில், 17 முன்னணி சர்வதேச நீதிபதிகள் ஜெனிவாவில் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்தநிலையில் தமது தீர்ப்பின்போது நீதிபதிகள், இலங்கை அரசாங்கத்தை கண்டித்துள்ளனர்.

மனுதாரரின் சித்திரவதை, சுவிஸ் மருத்துவர்களால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிரிக்கெட் மட்டையால் கடுமையாக தாக்கியமை, மின்சார அதிர்ச்சி மற்றும் பாலியல் துன்புறுத்தல்கள் போன்ற சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை மருத்துவக் குழுவினால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அவருக்கு நேர்ந்த கொடூரச் சம்பவத்திற்கு காரணமான காவல்துறையினரை சுதந்திரமாகவும் முழுமையாகவும் விசாரித்து, அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து தண்டனை பெற்றுக்கொடுக்கப்படுவதை உறுதி செய்யுமாறு இலங்கைக்கு, ஐக்கிய நாடுகளின் தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவருக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும். இது போன்ற நடத்தை மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்ய இலங்கை அரசாங்கம், அதன் சட்டங்களை மாற்றவேண்டும் என்றும் தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# யாழ். மரியன்னை தேவாலயத்தில் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் நினைவு





யாழ்ப்பாணம், ஏப். 22

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் நான்காம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ். மரியன்னை பேராலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது, குண்டு வெடித்த நேரமான காலை 8.42 மணிக்கு தேவாலய மணி ஒலிக்கப்பட்டு உயிரிழந்தவர்களுக்காக இரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டதுடன் ஈகச்சுடர் ஏற்றப்பட்டது.

நினைவேந்தலில் யாழ்.மறை மாவட்டக் குரு முதல்வர், அருட்தந்தையர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி வேண்டி பிரார்த்தனையில் ஈடுபட்டனர். (அ)

# பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்களுக்கும் அடையாள அட்டை!

கொழும்பு, ஏப். 22

பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாத காரணத்தால் தேசிய அடையாள அட்டைகளைப் பெற முடியாமல் இருக்கும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்திரி இந்த விடயத்தத் தெரிவித்தார்.

வாக்காளர் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவில் நிரந்தர வதிவிடத்துடன், பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தினால் தேசிய அடையாள அட்டை பெறாத 40 வயதுக்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜைகள் இதற்கு விண்ணப்பிக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி கோரி மட்டக்களப்பில் நேற்று பேரணி

மட்டக்களப்பு, ஏப். 22

ஈஸ்டர் குண்டு தாக்குதலில் உயிரிழந்த உறவுகளை நினைவு கூரும் நிகழ்வும் நீதி கோரிய போராட்டமும் நேற்றுக் காலை மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு பல்சமய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

தாக்குதலில் உயிர் நீத்த உறவுகளை நினைவு கூர்ந்து தீபச்சுடர் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. தொடர்ந்து மத அனுஷ்டானங்கள் இடம்பெற்று நினைவுரைகளும் நடைபெற்றன.

பல் சமய ஒன்றியத்தின் தலைவர் சிவசிறி சிவபாலன் குருக்கள் தலைமையிலும் செயலாளர் அருட்பணி க.ஜெகதாசின் ஒருங்கமைப்பிலும் இந்த நிகழ்வு உணர்வுபூர்மாக நடைபெற்றது.

ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பில் நீதியை நிலைநாட்டுமாறு வலியுறுத்தி அமைதியான முறையில் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

பேரணி சாள்ஸ் மண்டபத்தின் வாசலில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு மட்டக்களப்பு ஆயர் இல்லத்தின் பிரதான நுழைவாயில் வரை சென்று பதாகைகளை ஏந்தியவாறு சுமார் 15 நிமிடங்கள் அமைதியான போராட்டம் நடத்தப்பட்டது.

பல்சமய ஒன்றியத்தினதும், கரித்தாஸ் எகட் அமைப்பின் ஏற்பாட்டிலும் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சமயத் தலைவர்கள், பல் சமய ஒன்றியத்தின் அங்கத்தவர்கள், மட்டக்களப்பு வாழ் இளைஞர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)





# ஈஸ்டர் தாக்குதல் 4ஆம் ஆண்டு நிறைவு; சீயோன் தேவாலயத்தில் நேற்று அஞ்சலி



மட்டக்களப்பு, ஏப். 22

கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த உறவுகளின் நினைவஞ்சலி நிகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டன.

இதன் பிரதான நிகழ்வு பிள்ளையார் அடியில் உள்ள சீயோன் தேவாலயத்தில் நேற்றுக் காலை தேவாலயப் பிரதம போதகர் ரோசான் மகேசன் தலைமையில் இடம்பெற்றது.

இங்கு உயிரிழந்த உறவுகளின் ஆத்ம சாந்தி வேண்டியும் இந்த குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு ஆசீர்வாதம் வேண்டியும் விசேட வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

உயிரிழந்த உறவுகளின் நினைவாக குண்டுவெடிப்பு இடம்பெற்ற மத்திய வீதியில் உள்ள சீயோன் தேவாலயத்தில் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இத்துடன் உயிரிழந்த உறவுகளுக்கு சீயோன் தேவாலயத்தில் குண்டு வெடித்த நேரத்தில் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இங்கு நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லாசி வேண்டி விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

சீயோன் தேவாலய குண்டுவெடிப்பில் 33 பேர் உயிரிழந்ததுடன் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.